தென்மொழி

ஓ! ஓ! ஓ! பார்ப்பனரே!

தமிழ்நாட்டிற் பிறந்தெழுந்து, தமிழ்நாட்டுச்
சோறுண்டு, நீரும் உண்டு,
தமிழ்நாட்டில் தமிழ்க்கல்வி கற்றுயர்ந்து,
பணிபெற்று, வாழு கின்ற
தமிழ்நாட்டுப் பார்ப்பனரே! தமிழ்மொழியைத்
தமிழினத்தைத் தாழ்த்து கின்றீர்!
தமிழ்நாட்டைத் தில்லியர்க்கே தலைதாழ்த்தச்
செய்கின்றீர்! நன்றி கெட்டீர்!

சாதிமதம் பார்க்கின்றீர்! தமிழினத்தை
இழிக்கின்றீர்; சழக்கு செய்வீர்!
ஆதியிலே நும்மவர்கள் அளந்துவைத்த
வேதங்கள், புளுகு நூல்கள்
ஓதியவா றின்னும் ஏமாற்றுகின்றீர்!
கடவுள்கரு வறையுள் வாழும்
வேதியராய்ப் — புரோகிதராய் — விளங்குகின்றீர்;
பிறர்நலன்கள் விழுங்கு கின்றீர்!

நடுநிலையாய் — நேர்மையனாய் — ஞாயமொன்று
சொல்லுகின்றேன்; நயந்து கேட்பீர்!
பாடுபடும் மக்களெல்லாம் பார்ப்பனர்க்கே
அடிமையெனும் பழிமை நீக்கிக்
கேடுகெட்ட சாதிவுணர் வழித்துவிட்டு,
மடமைசெயும் மதநோய் நீங்கி,
நீடுபுகழ்த் தமிழோடும் தமிழரொடும்
நேர்மையராய் நெறிவாழ் வீரே!

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

சுவடி : 26
ஓலை : 6

விலை:
உருபா: 3-00

நமக்கு வந்த மடல்கள்

○ : 1487 : சோர்விலாச் செஞ்சுடரே! வணக்கம்; எண்ணிப் பார்க்கிறேன்; எடுத்தெடுத்துப் படிக்கிறேன். தங்களின் பல்லாயிரம் பாடல்களை, நூற்றுக் கணக்கான கட்டுரைகளை, பேச்சுகளை! ... அவை, மொழிக்காக—இனத்திற்காக—நாட்டிற்காகப் பிறந்து, வாழ்ந்து இறந்த—இறக்கப் போகும் எண்ணற்ற நன்னெஞ்சங்களின் உள்ளத்தினின்று என்றென்றும், எதிரொலித்தவை—எதிரொலிப்பவை...தெய்வப் பிறவியே! உண்மையில் சொல்கிறேன்; உயிர் மூச்சுடன் கலந்தே உரைக்கின்றேன். நான் செல்வனாக இருந்திருந்தால் கோடி கோடிப் பணத்தில் உங்களைக் குளிப்பாட்டியிருப்பேன்! குளிப்பாட்டிக் கொண்டே இருப்பேன்! திருவள்ளுவர், திருமூலர் இன்றிருந்தால்கூட—ஏன்—பாவேந்தர் பாரதிதாசன் இருந்தால் கூட—இப்படிப் பட்டுப் பட்டு—துன்பம் பட்டுப் பட்டு—பட்டுப் போன்று—பளிங்கு போன்று—பால் போன்று—எண்ண முடியாது; எழுத முடியாது! உண்மை இது என்பதை உண்மை உள்ளங்கள் உணரும்! வாழ்வின் வளமைக்கு என் அன்பின் வாழ்த்துகள்! அன்பு நிறை,

—அருள்மணி, வெங்காளூர்-21.

○ : 1488 : பேரன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய ஐயா அவர்களுக்கு வணக்கம். 1965-ஆம் ஆண்டு தென்மொழி எனக்கு அறிமுகமானது; தொடர்ந்து இல்லையென்றாலும் விட்டுவிட்டாவது நான் விரும்பிப் படித்த—விடாது பற்றிக் கொண்ட இதழும் இயக்கமும் அதுதான். ஏகலைவனாக, என் இயல்பினைச் சீராக்கி, தமிழில் எனக்குள்ள ஏலுந்திறனை வளர்த்தெடுத்ததும்கூட அதுதான். பள்ளி நாள்களிலிருந்தே பார்ப்பன எதிர்ப்பும் தமிழ்ப் பற்றும் என்னில் தளங்கண்டன; நாளும் அவை வளர்ந்தன; தமிழ், தமிழன் என்ற நிலைகள் எனது வலுவாயின் பின் அதுவே என் மெலிவுமாயின. தமிழ் (தமிழிலோ, தமிழாலோ அன்று) எழுதிய செயலுக்காக என்னைப் புலன் மாற்றிப் போட்ட நிகழ்வும் என் அலுவலகத்தில் உண்டு. பதவி நிலைகளில் இதனால் நான் தாழ்ச்சி பெற்றாலும் தமிழ் எழுதுவதைத் தவமாகக் கொண்ட என் செயல் மாற்றமுறவில்லை. வெளியில் இறங்கி வெளிச்சம் போட எனக்குத் தகுதியுமில்லை; என் அலுவலும் இடந்தரவில்லை. என்னால் முடிந்தளவு—எனக்குத் தெரிந்தவரை என் பணித்துணைவரை, பார்ப்பனரும் என்னோடிருக்கின்ற நிலையிலும் தமிழ் எழுதப் பழக்கியுள்ளேன்; திருக்குறள்மணி இறைக்குருவனாரின் 'வல்லினம்' வாங்கி அனைவருக்கும் தந்துள்ளேன்; அலுவலகப் பணியாளருள் எவர் மாற்றப் பெற்றாலும் அவருக்குத் திருக்குறள் பரிசளித்து அனுப்புவதை நெடுங்காலப் பழக்கமாகக் கொண்டிருக்கிறேன். இப்போது நானிருக்கும் அலுவலகத்தில் எளிய நிகழ்ச்சியொன்றின் மூலம் திருவள்ளுவர் படமொன்றை வைத்துள்ளேன். தமிழ் மலையான தங்கள் முன்னே இதையெல்லாம் சொல்லத் தயக்கந்தான் எனக்கு; என்றாலும் என்னை இனங்காட்ட இவை தேவையென்பதால் இவ்வளவும் சொன்னேன்.

—கா. செ. சாகுல் அமீது, பெரியகுளம்.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

என் தொடக்கமும் முடிவும்!

என்னைப் பற்றிநான் எண்ணுவ தில்லை!
முன்னைத் தமிழும் முனைப்பிலாத் தமிழரும்
இன்னும் இருப்பதால் நானும் இருக்கிறேன்!

பின்னும்ஓர் காரணம் பிழைப்பினுக் குண்டு!
தமிழும் தமிழரும் தாமுயர் வதற்கும்
அழிந்தநம் நாட்டின் அடிமை நீக்கியே
நரிமைப் பகையிடம் நான்றுகொண் டுள்ள
உரிமைமீட் பதற்குமே உயிர்வாழ் கின்றேன்!

அன்னைத் தமிழ்க்கே ஆருயிர் இயங்கலால்
என்னைப் புகழ்வதில் எள்மூக் களவும்
எனக்கு மகிழ்ச்சி ஏற்படல் இல்லை!

மனக்குகை எல்லாம் மறம்மண்டி யிருப்பதால்,
இகழ்ச்சியும் புகழ்ச்சியும் எனக்குவெற் றொலிகளே!
நெகிழ்ச்சியோ இறுக்கமோ நேர்வதங் கில்லை!

இமைப்பினில் மூச்சினில் இயங்கலில் எல்லாம்
அமைப்பும் ஆக்கமும் அவற்றின் வளர்ச்சியும்
பொதிந்து கிடப்பதால் பொருள்நினை வும்இலை!
பதிந்த பாதையில் பாதங்கள் சுமக்கும்!

ஆக்கம் தமிழ்க்கெனில் அகமகிழ் கின்றேன்!
தாக்கம் தமிழ்க்கோ தமிழருக் கோஎனில்
உடலும் உள்ளமும் உயிரும்நோ கின்றேன்!

விட்டலரும் கொள்கையோ—வியன்தமிழ் ஏற்றமும்
தமிழர் உரிமையைத் தாம்பெறு வதுமே!
இமிழா துழைப்பதே என்னுடை வாழ்க்கை!

விழிப்பதில் தொடங்கிடும் வினையோ பகையினை
அழிப்பதில் முடியும்! அதுவரை இயக்கம்!

என்றுநான் பிறந்தேன்? என்றுநான் இறப்பேன்?
ஒன்றும் நினைவிலை! உயிரால் அழிவிலேன்!
என்னுடல் அழியினும் என்றும்நான் இருப்பேன்!
தின்னுவ திலை, எனை — மண், மழை, தீ, வளி!

உண்டல் உடுத்தல் உறங்கல் தவிர்ந்ததும்
அண்ட வெளியினுள் அடக்கம் பெறுகிறேன்!

அவர்களே ஒப்புக் கொள்கிறார்கள்!

இந்த நூற்றாண்டில் தனித்தமிழ் இயக்கத்தின் தாக்கத்தால் வடமொழிச் சொற்களும் பிறமொழிச் சொற்களும் எழுத்துத் தமிழில் அருகிவருவதைப் போலவே, தற்காலத் தமிழில் பெரு வழக்காகப் பரவி வரும் புதிய சொற்களில் மிகப் பெரும்பாலா-னவை தனித்தமிழ்ச் சொற்களாகும் என்பதையும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். —ஐ. மகாதேவன் 'தினமணி சுடர்' 25 1-92.

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

([illegible] தி. பி. 1990 (1959))

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் முதன்மை, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் புரட்டுகளும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் புரட்டுகளும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்புரட்டுகளினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாதல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமுதல், நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். (தொலைபேசி: 847829)

[சுவடி: 26] தி.பி. உ0உங —மேழம் (ஏப்ரல் 92) (ஓலை:6]

தமிழறிஞர்களின் தமிழ்ப்பணி - 7.

தமிழ் மொழியில் இதுவரை தோன்றிய அகர முதலிகள் யாவும் கலப்புத்தமிழ் அகர முதலிகளே! அவற்றைச் செய்த தமிழறிஞர்களும் மொழியாய்வு அறிஞர்களோ, சொல்லாய்வறிஞர்களோ, தன்மானத் தமிழறிஞர்களோ, உண்மைத் தமிழ்ப்பற்றின், அதன் வளர்ச்சி நோக்கின் அடிப்படையில் அவற்றைச் செய்தவர்களோ அல்லர்; வெறும் இலக்கிய இலக்கணப் புலவர்களே! அவர்கள் ஆரிய அடிமையுணர்வு அற்றவர்களும் அல்லர்; தமிழை முதன்மொழியாகக் கொண்டவர்களோ, கண்டவர்களோ அல்லர். பச்சை ஆரிய அடிமைகள்; சமசுக்கிருதப் புகழ்பாடிகள்! மதத்தாலும், மொழியாலும், இனத்தாலும் பார்ப்பனீயத்திற்கு மெய்யடிமைகளே ஆவர்; அவ்வகையில் பாவாணர் ஒருவர்தாம் இவற்றுக்கு நேர்மாறானவர்; தமிழுக்காகவே தம் வாணாளையும், வாய்ப்பு வசதிகளையும், பட்டம் பதவிகளையும் வீணாக்கிக் கொண்டவர், தமிழ் சமசுக்கிருதச் சார்பின்றி, அதன் அடிப்படையின்றி வாழக் கூடியது, வளரக் கூடியது என்னும் கால்டுவேலர் கண்டுபிடிப்பைச் சொல்லுக்குச்

சொல், எழுத்துக்கு எழுத்து மெய்யாக்கியவர், உறுதிப்படுத்தியவர், பாவாணர்.

ஆனால், அவருக்கு முன்னர் தோன்றிய தமிழறிஞர்கள் எவரும், அவரளவு முழுக்க முழுக்க தமிழ்மொழியாராய்ச்சியில் தம்மை மூழ்க்கிக் கொண்டவர்கள் அல்லர். அவ்வகையறிஞர்களைத்தாம், பார்ப்பனக் கல்வியாளர்கள் ஊக்கித் தமிழ்மொழியறிஞர்களாகவும், சொல்லாய்வறிஞர்களாகவும், இலக்கிய, இலக்கணப் பேராசிரியர்களாகவும் தலைமேல் தூக்கி வைத்துக் கூத்தாடினர் ; கொண்டாடினர். ஏனெனில் அவர்கள் வழி, தமிழ்மொழிக்கு ஆக்கந்தேடுவதுபோல் மறைமுகமான அழிவைத் தேடிக் கொடுத்தனர். தமிழ்மொழியின் வள, நலன்களையெல்லாம் பிறர் வியக்கும் வண்ணம் அத்தமிழ் மூதறிஞர்கள் எடுத்துப் பேசி ஏற்றங் கூறிய அதே வேளையில், தமிழ் சமசுக்கிருதத்தின் தொடர்பினால்தான், அதோடு கலந்து உறவாடிய தன்மையினால் தான், அத்தகைய திறனையும் உரனையும் பெற்றது என்று அவர்களின் வாய்களாலேயே கூற வைத்து உள்ளூர மகிழ்ந்து கொண்டனர். இத்தகையவர்களுள் தலை சிறந்த ஆரிய, சமசுக்கிருத அடிமைகளாக விளங்கியவர்கள் பேரா. எசு. வையாபுரியார், பேரா. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், வழக்கறிஞர் இரா. பி. சேது முதலியோராவர். இவர்கள் மூவரும் தமிழினக் குலமரபில் சைவ வேளாண்குடியில் பிறந்து தமிழுக்கும், சைவத்திற்கும் கட்டியங் கூறி நின்ற ஆரிய அடிமைகளாவர்.

இவர்களின் தமிழ் வேளாண்மை விளைச்சலை இன்று கூட, பெரும் பட்டயங் கட்டிப் பேசுபவர்களும் அவர்களுக்குப் புகழ் சேர்க்கின்ற தமிழறிஞர்களாகத் தங்களை முன் நிறுத்திக் கொள்பவர்களும் இருக்கவே செய்கின்றனர். அவர்களுள் ஒருவர், அடுத்து மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் பதவிக்கும், மற்றொருவர் தஞ்சைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவிக்கும், பிறிதொருவர் புதுவைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவிக்கும் அங்காந்து திரியும் ஆயக்கட்டுப் பேராசிரியர்களாவர்.

கடந்த செப்டம்பர் 7, 91 'தமிழ்மணி'யில் பேரா. தமிழண்ணல், திரு. வையாபுரியாரின் தமிழ்த் தொண்டைப் பற்றி ஒரு கட்டுரை வரைந்திருந்தார். அதில் அவரின் தமிழாய்வுப் பணிகளைப் பற்றி வெகுவாக—வாயாரப்—பாராட்டியிருந்தார். அவற்றுள் ஒன்று, வையாபுரியார் ஆய்வைக் குறை கூறுவாரை இவ்வாறு சாடியிருந்தது :

"பேராசிரியரை மறுக்க வேண்டுமேல் தக்க காரண காரியம் தேட வேண்டியுள்ளது. அங்ஙனம் ஊன்றித் தேடும் உழைப்பும் கூர்த்தமதியும் கல்வித் தகுதியும் அற்றவர்கள் பேராசிரியர் மீதில் ஆத்திரப்படுவர்"—என்பது தமிழண்ணல் அவர்களுடைய கூற்று.

எதையும் காரண காரியத்தோடுதான் மறுக்க முடியும். வெறுமனே 'நான் அவரை மறுக்கிறேன்' என்று எவரும் மறுத்து விட முடியாது. மறைந்த மொழி ஞாயிறு பாவாணர் அவர்கள்

"A Linguistic survey of the Madras University Tamil Lexicen" என்ற அரிய ஆய்வு நூலை ஏறத்தாழ 45 ஆண்டுகளுக்கு முன்பேயே எழுதி வெளியிட்டார். அதில் திரு. வையாபுரியார், தெ.பொ.மீ. ஆகியோர் இருந்து செய்த பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதியின் குற்றங் குறைகள் பலவற்றைச் சான்றுகளோடு எழுதிப் பல்கலைக் கழக அகராதிக்குத் திருத்தம் வெளியிடக் கோரியிருந்தார். (அத்தகைய ஓர் ஆய்வு நூலை எழுதுமாறு அவ்வகராதியின் ஆறு மடலங்களையும் அதைத் தொகுத்த முப்பதுக்கு மேற்பட்ட ஆசிரியர் குழுவினரோ தலைவரோ கூட பாவாணர் போல் வருந்திப் படித்திருக்க முடியாது.) ஏன் அம்முயற்சி செயலாக்கப் பெறவில்லை? தமிழண்ணலுக்கு விடை தெரிந்தால் சொல்லட்டும். அவர் விரும்பும் படி காரண காரியமாகக் கூறப்பெற்ற மறுப்புத்தானே, அது? ஏன் அது மதிக்கப் பெறவில்லை? ஏனெனில் பார்ப்பனியமும் அதன் அடிமைகளும் அத்தகைய உண்மையான எதிர்ப்புகளை என்றும் மதிப்பதேயில்லை.

வையாபுரியார் சிறந்த பேரறிஞராக இருக்கலாம்; ஆராய்ச்சியாளராக இருக்கலாம். ஆனால் அவரின் அத்துணைத் திறமைகளும், பார்ப்பனியத்திற்கும் சமசுக்கிருதத்திற்கும் பயன்பட்ட அளவு, தமிழ்மொழிக்கும் தமிழர்களுக்கும் பயன்படவில்லை. அப்படியே பயன்பட்டிருந்ததாக திரு. தமிழண்ணல் போன்றவர்கள் கருதினாலும், அஃது ஒரு சிறிய அளவே பயன்பட்டிருக்கலாம். அதைப் பெரிது படுத்திப் பேசுவது, மலத்தில் அரிசி பொறுக்குவதைப் போன்றதே!

தமிழ்ப் பேராசிரியராக, அல்லது பேரறிஞராக இருப்பது வேறு. தமிழுக்கும் தமிழினத்திற்கும் உழைப்பது என்பது வேறு என்பதைத் தமிழண்ணல்கள் உணர்தல் வேண்டும். அதைவிடுத்துப் பொத்தாம் பொதுவில், "எனக்குத் தெரிந்த வரை தமிழ்ப்பற்றுளர்கள் என்பவர்கள் பலர் வெறும் உணர்ச்சி வயப்படும் 'ஆத்திரக்' காரர்களாகவே காணப்படுகின்றனர். வையாபுரி(ப்பிள்ளை)யின் நுண்மாண் நுழைபுலமும் முயற்சியும் உழைப்பும் நோக்க, அவர் கூறும் சில 'முடிபுகளால்' தமிழ் வளர்ச்சி தடைப்பட்டுவிடாது என்ற நம்பிக்கை எனக்குளது. அவர்தம் ஆய்வுப் போக்கு அத்தகையது என்பதையே இங்கு சுட்டிக் காட்ட விழைகிறேன்' என்று தமிழண்ணல் அக்கட்டுரையில் எழுதுகிறார்.

திரு. தமிழண்ணல் அவர்கள் தமிழ் இலக்கியத்தில் சிறந்த புலமையுடையவர் என்பதை நாம் அறிவோம். ஆனால், மொழியியலில் அவர் திரு. வையாபுரியார் போன்றவர்களின் வாழ்வியலையும் சூழ்வியலையும் விளங்கிக் கொள்ளும் அளவிற்கு அத்துணைத் திறம் வாய்ந்தவர் அல்லர் என்பதைத் தன்மானத் தமிழன்பர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். இனி, வரலாற்றியலையும், இனவியலையும் இன்னும் கூர்மையாகத் தமிழண்ணல் நோக்கியிருத்தல் இல்லை என்பது அவரின் கருத்துகளால் புலப்படுகிறது.

தமிழகத்தில் மொழியியல், இலக்கியவியல், தமிழியல் என்னும் துறைகளில் மிகு திறமும் ஆய்வறிவும் பெற்ற பேரறிஞர்கள் கூட, தம் இனவியலையும் வரலாற்றியலையும் நன்கு விளங்கிக் கொள்ளவில்லையானால், ஆரியப் பார்ப்பனீயம், தமிழையும், தமிழினத்தையும் எவ்வெவ் வழிகளில் எவ்வெவ்வாறு கெடுத்தது, கெடுத்து வருகிறது என்பவற்றை மேலோட்டமாகக் கூட விளங்கிக் கொள்ள முடியாது — என்பதைத் தமிழன்பர்கள் நன்கு உணர்தல் வேண்டும்.

மனநலம் நன்குடைய ராயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப்பு உடைத்து 458

என்று கூறுவார் நம் பேராசான். இது திருக்குறள் பொருளியலில், 'சிற்றினம் சேராமை' அதிகாரத்துள் வருவது; அரசர்க்குக் கூறுவது. இதில் 'மனநலம்' என்பதை மனத்தினது நல்ல தன்மையை—நன்மையை—என்று பொருள் படுத்தியுள்ளனர், பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்கள். ஆனால், மனநலம் என்பதற்கு, மனத்தின் நல்லுணர்வை, அதன்வழி அறிவுணர்வை, அவையிரண்டன் வழி சான்றாண்மைக்குரிய தன்மைகளை—என்றெல்லாம் பொருள் கொள்ளுதல் வேண்டும். கொள்ளவே, இனம் நலமாக இருந்தால்தான் மனத்தின் வழி அமையும் நலன்கள் காக்கப்பெறும் என்பதே — அத்திருக்குறளின் மெய்ப் பொருளாகும். மனத்தின் வழி அமையும் நலன்கள் அறிவுள்ளிட்ட குண நலன்கள் அனைத்தும் ஆகும்.

ஒருவர் எவ்வளவு பெரிய சான்றோர் ஆயினும், அறிவர் ஆயினும், ஒழுக்கமுடையவராயினும், பண்புடையவராயினும், செல்வராயினும்—அவர் சார்ந்த இனத்திற்கு நலிவும் மெலிவும் இழிவும் அழிவும் நேர்ந்து வருமானால், அவரின் அம் முந்துற நலன்களும் காக்கப்பெறாமல் அழிவுறும் என்பதே அவ்வருந்திருக்குறளின் நறுந்திருவுரையாகும்.

இங்குச் 'சிற்றினஞ் சேராமை' என்பது, பரிமேலழகரின் கூற்றுப்படி 'சிறிய இனத்தைப் பொருந்தாமை' எனவாகி 'சிறிய இனமாவது 'நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல்' என்பாரும், (புறநா: 29) விடரும் (விஷத்தன்மை கொண்டவரும்), தூர்த்தரும் (துஷ்டரும்), நடரும் (நாடக நடிகரும்) உள்ளிட்ட குழு' என வரும் கீழ்மை மாந்தப் பொருள் விளக்கம் கொண்டதன்று; 'சிறிய அளவினம்' (Minority People) என்னும் பொருளைக் கொண்டு, திருவள்ளுவர் காலத்துத் தமிழகத்துப் போந்து வதிந்து, தமிழ்க்கும் தமிழினத்திற்கும் மறைமுகமாய்க் கேடு செய்ய முனைந்த அளவுகுன்றிய எண்ணிக்கையானமைந்த ஆரியப் பார்ப்பன இனத்தை மறைபொருளாகக் குறித்ததென்க. அரசன் தமிழகத்துள் அக்கால் போந்து வாழ்ந்த எண்ணிக்கையில் சிறிய இனத்தவரான ஆரிய இனத்தவரைச் சார்ந்து இயங்குதல் கூடாது என்று மறைமுகமாக அறிவுறுத்தியதாகும் இது.

இதனை ஏன் இத்துணை வலிவாகவும் விரிவாகவும் எடுத்துக் கூறினேமெனில், ஆரியத்தின் கையுள் அறிஞர்கள் ஒடுங்கி வாழ வேண்டியிருந்த சூழலால்தான், தமிழ்மொழியும், தமிழினமும், தமிழ்நாடும் மாற்றினத்திற்கும் வேற்றினத்திற்கும் அடிமைப் பட்டுக் கிடக்கின்ற வரலாற்றியலையும் ஆரியத்தின் சூழ்ச்சியியலை-யும் திரு. தமிழண்ணல்கள் மனக்கசண்டற நினைத்துப் பார்க்க வேண்டும் என்பதால்தான்.

மேலும், திரு. தமிழண்ணல்கள் வையாபுரியார் போலும் வெறும் இலக்கிய ஆய்வறிஞர்க்குக் காப்புச் செய்யும் முயற்சியின் நிழலில், இனவியல், வரலாற்றியல், நாட்டியல் முயற்சி-யாளர்களுக்குத் தடையாகக் கருத்தறிவிப்பதை ஒரு பெருங் குற்றமாகவும் கேடாகவுமே கருதிக் கொள்ளுதல் வேண்டும். அத்துடன், அவர் கூற்றில் தமிழ்ப்பற்றுள்ளர் பலரை வெறும் உணர்வாளர்களாகவே மதிப்பிடுவதாகக் கூறுவது இன்றிருக்கின்ற உண்மைத் தமிழன்பர்கள் ஒரு சிலரையும் பின்னடையச் செய்து விடும் என்பதையும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இவ்-விடத்தில் திரு. தமிழண்ணல் பயன்படுத்திய 'ஆத்திரக்காரர்கள்' என்னும் சொல், அவரை மட்டும் அத்தன்மையற்றவராகக் கருதிக் கொள்வதற்குப் பயன்பட்டு விடாது.

மேலும், வையாபுரியார்களின் காட்டிக்கொடுக்கும் நிலைக்கும் ஆரியத்திற்கு அடிமைப்பட்ட நிலைக்கும், இவர் சப்பை வைத்துக் கட்டுவது பின் வரும் கருத்தில் தெளிவாகப் புலப்படுகிறது.

"வேதமொழி அகராதி, பிராகிருதமொழி அகராதி பாலி-மொழி அகராதிகளை, லெக்சிகன் ஆசிரியராகிய அவர் புரட்டிப் பார்த்த போது, அவற்றில் காணப்பட்ட தமிழோடு தொடர்பு-டைய சொற்கள் எல்லாம் அவ்வம் மொழியிலிருந்து தமிழால் கடன் பெறப்பட்டன என்றே அவருக்குத் தோன்றியுள்ளது. தமிழிலிருந்து அம் மொழிகளுக்குச் சென்றிருக்கவும் கூடும் என நினைக்கவும் அன்றைய நிலை அவருக்கு இடம் தரவில்லை. பிற்-காலத்தில் பேராசிரியர்கள் எமனேவும் பரோவும் எழுநூறு தமிழ்ச் சொற்களுக்கு மேல் வேத நூல்களிலேயே ஏறியுள்ளன என்று கூறிய ஆய்வுப் போக்குகள் அன்று மலரவில்லை" என்று தமிழண்-ணல் வையாபுரியாருக்கு ஏனோ கேடயமாகிறார். ஒருவேளை அவருக்கு ஆரியத்தால் வந்த நல்வாய்ப்புகள் தமக்கும் வரும்—வர வேண்டும்—என்று கனவு காணுகிறாரோ என்னவோ ?

ஓர் அகராதி ஆசிரியர், தமக்கு முன்னுள்ள மொழியகராதி-களை எவ்வெவ் வகையில் எவ்வெவ்வாறு மதிப்பிடல் வேண்டும், ஒரு மொழிச் சொற்கள் வேறு மொழியிற்போய் வழக்கூன்று-மாயின் அந்நிலை எவ்வெக் காரணங்களால் எவ்வெவ்வளவில் நிகழ்ந்திருக்க வேண்டும் என்றெல்லாம் திட்டவட்டமாக அறிய மாட்டாதவராக உள்ளார் எனில் அவருடைய அகராதியாசிரியத் தன்மையை நாம் எவ்வாறு மதிப்பிட முடியும் ? இவ் வியலா-மையை அல்லது தன் மான மிழந்த அடிமைத் தன்மையை அன்றைய(கால)நிலைக்குள்தான் எவ்வாறு மறைத்து விட-

முடியும்? இனி, 'தமிழிலிருந்து அம்மொழிகளுக்குச் சென்றி-ருக்கவும் கூடும் என நினைப்பது' மொழியாய்வின் முடிவன்று; தாம் நினைப்பதெல்லாம் முடிவாகி விட முடியாது. முடிவான விளைவை நினைப்பதுதான் உண்மையான ஆராய்ச்சியின் பயன். வையாபுரிகள் எப்பொழுதும் ஆரியர் உப்பைத் தின்று அவர்-களுக்குச் சார்பாகவே நினைத்தனரே தவிர, தமிழ்க்கும் தமிழர்க்-கும் சார்பாக என்றும், எந்த ஆய்விலும் உண்மை முடிவு கண்டவர்களல்லர். இன்றைய நிலையில் வையாபுரியாரின் நெகிழ்ச்சி, அற்றைக் கால நிலையின் அழுத்தமாகத் தமிழண்ணல்-களுக்குப் படலாம். ஆனால் தமிழண்ணல்களின் இன்றைய கால நெகிழ்ச்சியின் நிலை அழுத்தத்தை என்றைக்கு எவரெடுத்து அவர் போல் காட்டப் போகிறார்களோ என்பதற்கு அதே காலந்தான் விடை சொல்ல முடியும்—என்ற இந்த அளவிலும், தம் ஆரிய அடிமைக் கருத்துகளைத் தங்கு தடையின்றி வெளிப்படுத்து-வதற்குத் 'தினமணி' கஸ்தூரி ரங்கன்கள் இடந்தருகிறார்கள் என்பதற்காக, எதையும் உண்மைக்கு மாறாக, வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று எழுதிவிடக் கூடாது என்று ஓர் எச்சரிக்கை விடுத்த நிலையிலும், வையாபுரியார்களைத் தோளில் தாங்கும் தமிழண்ணல்களின் செயற்பாடுகளை இங்கு நிறுத்திக் கொள்வோமாக.

இவ்விடத்தில் இன்னொன்றை நாம் நினைவு கூர்வது ஓர் அகராதிப் பணியின் அழுத்தம் எத்தகையது என்பதை உணர்-வதற்கு நமக்கு உதவுவதாக இருக்கும்.

நம் சொல்லாய்வறிஞர் திரு. அருளியார் அவர்கள் தாம் எடுத்துக் கொண்ட மூன்று அகரமுதலிப் பணிகளில் ஒன்றாகிய 'கலைச் சொல் அகர முதலி'ப் பணியை நிறைவுற முடித்து ஓராண்டாகி விட்டது என்று தெரிய வருகிறது. அதற்கவர் எடுத்துக் கொண்ட பணிப் பரப்புப்பற்றி ஒருமுறை நம்மிடம் இவ்வாறு குறிப்பிட்டார்:

"கடந்த 150 ஆண்டுக்கால அளவிடையில் தமிழகத்திலும், இலங்கையிலும் வெளிவந்துள்ள அறிவியல் — கலையியல் தொடர்-பான நூல்களில் — ஏறத்தாழ 1200 அரிய நூல்களைத் தெரிந்-தெடுத்து, அவற்றில் ஆங்கிலக் கலைச் சொற்களுக்கு நேரிய தமிழாக்கச் சொற்களாகப் பதிவுற்றிருந்த ஏறத்தாழ மூன்றிலக்கம் (3,00,000) பதிவிடங்களைக் கூர்ந்து நோக்கி, இறுதியில், இன்றைய அறிவியல் — கலையியல் வளர்ச்சிக் கேற்ற பொருட்பாடுகளில் அமைந்திருந்த ஓரிலக்கம் சொற்கள் மட்டும் தனிப்படத் தொகுக்கப் பெற்றுள்ளன. இதில் பயிலப் பெற்றுள்ள துறைகள் (fields) நூற்று முப்பத்திரண்டு (132) ஆகும். நூலின் அளவு பத்துத் தொகுதிகளும் பின்னிணைப்பும் ஆக மொத்தம் மூவாயி-ரம் (3000) பக்கங்களுக்கும் மேல் வரும் தகுதிப்பாடு கொண்டது."

இத்தனைக்கும் அருளியார் ஒருவரே ஒருதனி ஓரேர் உழவராக இருந்து ஆற்றுகின்ற அருஞ்சிறப்புடைய பெரும் பரப்புப்பணி

இது; முற்றிய தமிழறிவுடன் நெற்றிய ஆங்கில அறிவும், இற்றைய அறிவியல் வளர்ச்சி விளக்கமும், அவற்றிற்கு மூலமாகிய கிரேக்க இலத்தீனச் சொல்லறிவும் கற்றுக் கைவந்தாலன்றி, இதுபோலும் அகராதிப் பணியில் அடியூன்றுதல் அறக்கடினம் என்க. இக் 'கலைச் சொல் அகர முதலி'யன்றிக் 'கலைச் சொல்லாக்க அகர முதலி'ப் பணியும், 'தூயதமிழ் அகர முதலி'ப் பணியும் — அருளியார்பால் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒப்படைத்துள்ள பெரும் பணிகளாம்; பின்னிரண்டு பணிகளும் மிகமிக அகலமாகவும் ஆழமாகவும் நடந்தேறி வருகின்ற பணிகளாகும். இவை இரண்டும் முற்றுப் பெற இன்னும் ஐந்தாண்டுகள் ஆகும் என்று கூறப்பெறுகிறது: திட்டம் தொடங்கி முழு ஏழாண்டுகள் (தொடக்கம் : 27—4—85) நிறைவுறினும், மேலும் ஐந்தாண்டுகள் ஆகும் என்பது மிகுதியன்று; இனி அதற்கு மேலும் ஒரு சில ஆண்டுகள் செல்லினும் கூட அதுவும் சால்வதே. அறிவு வளர்ச்சிக்கும் அதையொட்டி நடையிடும் மொழி வளர்ச்சிக்கும், அவையிற்றைத் தழுவி வளரும் அறிவியல் மேட்டிமைக்கும் அளவேது ?

'தூயதமிழ் அகர முதலி'யின் உருவாக்கத்திற்கு அடிப்படையான சொல் தொகுப்புப் பணி பெரும்பாண்மையளவில் நிறைவெய்தி, மடல ஆக்கப் பணி நடந்து கொண்டுள்ளதாக, அண்மையில் அவர் நம்பால் தெரிவித்தார்; அத்துடன் 'கலைச் சொல்லாக்க அகர முதலி'க்கென, இதுவரை 2500 (இரண்டாயிரத்து ஐநூறு) புதிய கலைச் சொற்களும் வேரும் மூலமும் விளங்கக் கண்டு படைக்கப் பெற்றுள்ளன என்று அவர் அறிவிக்கக் கேட்டுப் பெரிதும் அக மகிழ்ச்சியுற்றனம்; கலைச் சொல்லாக்கம் அத்துணை எளிய செயலன்று; அறிவுக் கடலுள் அடி காண ஆழ மூழ்கி முத்தெடுப்பது போலும் அருஞ் செயல் அது;

அகர முதலியறிஞர் அருளியார் அவர்களின் தூயதமிழ் அகர முதலிப் பணி இந்த வகையில் தமிழ்மொழி வரலாற்றிலேயே இதுவரை நிகழாமல் இருந்த பணியாகும். தூயதமிழ் அகரமுதலி என்று இதுவரை எவருமே செய்ததில்லை; மொழி ஞாயிறு பாவாணர் செய்ததும் 'செந்தமிழ்ச் சொற்பியல் அகர முதலியே' (Etymological Dictionary); ஆனாலும் அது தூய தமிழில் தான் செய்யப் பெறுவதாக இருந்தது; தொடக்கத்தில் அவர் 'தூய தமிழ் அகர முதலி' (Pure Tamil Dictionary) தான் செய்வதாக இருந்தார்; பிறகு அவர் முழுத்திறனும் வெளிப்படுமாறு நாம் தாம் அவரைச் சொற்பிறப்பியல் அகர முதலியொன்றைச் செய்யுமாறு கேட்டுக் கொண்டோம்; அதற்கான திட்டம் ஒன்றையும் 'தென்மொழி' வாயிலாக வகுத்துக் கொடுத்தோம்.

பாவாணர் எழுதி வெளியிடவிருந்த செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலியை வெளியிட வகுத்துக் கொண்ட திட்டப்படி அவ்வகரமுதலி 20 மடலங்களாக (Volumes) வெளிவரவிருந்தது; ஆனால், அகர ஆகாரத்தைப் பற்றி அவர் எழுதி வைத்திருந்த முதல் மடலந்தான் அவர் மறைவுக்குப் பின்னர், அவரின் அடுத்த துறை இயக்குநரால் வெளியிடப் பெற்றது; (தொடரும்)

அறுபதாம் பிறந்த நன்னாள்!

நெஞ்சார்ந்த வாழ்த்துகள்!

இன,மொழி ஆர்ப்பட்டங்கா எம் இன வீறே! எம் இனப் பேறே! எங்கள் ஐயாவே! தங்களின் அறுபதாம் பிறந்த நன்னாளில் எங்களின் நெஞ்சார்ந்த வாழ்த்துகள்! அன்புநிறை,

—கவின் (இராமலிங்கம்), தஞ்சாவூர்-3

தமிழ்வாழுங் காலம் வாழ்க!

தகை மிகு ஐயா அவர்கட்கு,

நாளை தங்களது அறுபதாம் பிறந்தநாள் என்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகின்றேன். தமிழ் வாழும் காலம் தாங்கள் வாழ வேண்டும் என்று வாழ்த்துகின்றேன். தங்கள் உண்மையுள்ள,

—மா. பார்வதியம்மாள், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை-5

உறங்கிக் கிடக்கும் தமிழர்க்கு உணர்வூட்டுங்கள்!

பெருமதிப்பிற்குரிய பாவலரேறு அய்யா அவர்களுக்கு, தமிழ்நம்பி வணக்கம்: தென்மொழியின் தொடக்க நாள் முதல் உங்கள் மேல் பற்று வந்தமைக்குக் காரணியம், தப்பிப் பிறந்த தமிழர்களில் நீங்கள் ஒருவர். சென்ற கிழமை மணிவிழா நடைபெற்றதாக அறிந்தேன். நீடூழி வாழ்ந்து உறங்கிக் கிடக்கும் தமிழருக்கு உணர்வூட்ட என் வாழ்த்துகள்:

—புலவர். ப. ச. தமிழ் நம்பி, பூதமங்கலச்சேரி-3

தமிழும் தமிழினமும் செழிப்பதற்குப் பாடாற்றுக!

பேரன்பின் ஐயா அவர்களுக்கு, வணக்கம். 10—3—92 அன்று தங்கள் அறுபதாண்டு அகவைத் தொடக்க நாள் என்பதறிந்து நண்பர்களுக்குச் சொன்னேன்; நானும் மகிழ்ந்தேன், நிலமும் பொழுதும் போல் நீடுவாழ்ந்து, தமிழும் இனமும் செழிப்பதற்குப் பாடாற்றும் வலுவைத் தங்களுக்கு அளிக்குமாறு திருவருளை வழுத்துகிறேன். அன்புடன்,

—கா.செ. சாகுல் அமீது, சித்தையன்கோட்டை-3

பல்லாண்டு வாழ்க! பன்னலம் பெறுக!

பேரன்புடையீர், வணக்கம்.

இன்று (10—3—92) தங்களின் பிறந்த நாள் அல்லவா? தங்கட்கு என் உளங்கனிந்த நெஞ்சார்ந்த பிறந்த நாள் வாழ்த்துகளை அன்புடன் தெரிவித்து மகிழ்கின்றேன். பல்லாண்டு வாழ்க! நன்றி வணக்கம், மிக்க அன்புடன்,

—தங்க. சங்கரபாண்டியன், சென்னை-103

நீ ஏற்றிவிட்ட சுடர் நானே!

'தமிழரிமா, நீ பிறந்தாய் - இன்றந்த நாளென்று நாம் மகிழ்வோம்.'— என்றுவோ, 'தமிழினத்தின் விடிவே' 'நான் மகிழும் நாள்' என்பாய்!

உன் அணுவில் ஒரு கூறும் என் செயற்கே 'முழுதளித்தாய்' "என் செய்வேன் என்றிருக்க' உன் சொல் விடுமோ? இன்றியக்கம், நாளையும் நானெனச் சென்றியங்க விட்டாயே. பண்டிருந்த நிலையன்று; பாரின்று, தமிழினந்தான் நன்றிருக்க வேண்டுமெனும் நல்லுணர்வை, செயலை ஏற்றிட்டேன்; நீ ஏற்றிவிட்ட சுடர் நானே!

உனை வாழ்த்தி எனை வாழ்த்தும் இசையளித்தாய்... உனக்கென்று எவ்விடம் வைத்தாய்? அதனாலே 'உளம் தந்தேன்.' வாழ்க துரைமா எனும் அரிமாப்பாவலன்; வாழ்க "பெருஞ்சித்திரன்"...!

—பறம்பைஅறிவன், உ. த. மு. க. பொதுச் செயலாளர்.
பறம்புக்குடி.

தமிழ் போல் வாழ்க!

பேரன்புப் பெருந்தகை மேதகு பாவலரேறு அய்யா அவர்கட்கு! என் பணிவான வணக்கங்கள் பல, நலமே சூழ்க! இன்று அய்யாவின் பொன்னான பிறந்த நாள், பெரியாருக்குப் பின் வீழ்ச்சியுற்ற தமிழகத்தின் விடிவெள்ளிச் சுடரொளியாம் எங்கள் பாவலரேறு அய்யா அவர்களே! நீங்கள் நீடு வாழ்க! தமிழ் போல் வாழ்க!

"நெஞ்சிலுற்றது செய்கையில் காட்டுதல் நீசமன்று மறக்குல மாட்சியாம்," என்ற பாவேந்தனின் வீரவரிகளுக்கு எடுத்துக்காட்டாய் வாழும் "தமிழகத்தின் வால்டேர்" அவர்களே வாழ்க! வாழ்க!

காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ?
கறைச் சேற்றால் தாமரையின் வாசம் போமோ?

என்றபடி தமிழின இரண்டகர்க(துரோகிக)ளாலும், சாதி வெறியர்களாலும் தங்களை மறைக்க முடியாமல் போயிற்று; காலமெனும் காற்று குப்பைகளைப் பறக்கடித்துவிடும்! குன்றுகள் என்றும் நிமிர்ந்து நிற்கும்! பாவலரேறு புகழ் என்றும் ஒளிரும் என்பது திண்ணம்.

தங்கள் பாக்களின் வீரவரிகள் தமிழுணர்வூட்டி ஒவ்வொருவரும் தமிழ் மறவர்களாக மாறும் நாள் விரைவில் நெருங்கிவிட்டது.

ஆகவே இந்நந்நாளில் வாழ்வாங்கு வாழ நீடூழி வாழ வாழ்த்துகிறேன்.

அய்யாவை வாழ்த்தத் தகுதியில்லை என்பதால் வணங்குகிறேன்!

—புலவர். தி. மு. அரசமாணிக்கம், ஈரோடு: 11.

இறைப்பேராற்றல் அருளுக!

அன்புள்ள ஐயா, வணக்கம். தாங்கள் அனைத்து நலன்களும் பெற்றுப் பல்லாண்டுகள் வாழ எல்லாம் வல்ல இறைப்பேராற்றல்

அருள்புரிய வேண்டுகிறேம். தங்களுக்கு எங்கள் நெஞ்சு கனிந்த பிறந்த நாள் வாழ்த்துகள். அருள் கூர்ந்து பிறந்தநாள் அன்பளிப்பை (ஒவ்வொருவரும் தனித்தனியாக உரு ஆயிரம்) ஏற்றுக் கொள்ளுங்கள். தங்களன்புள்ள,

—பொற்செழியன், சேரலாதன். பெங்களூர்-42

(ஆசிரியர் நன்றியுரை: தாங்கள் இருவீரும் அளித்த உருபா ஈரா யிரமும் கிடைத்தது. அதைப் பெற்றுக் கொண்ட நன்றிக்கடனாகத் தமிழ்க்கும் தமிழர்க்கும் கடமையாற்றிக் கழிப்பேன். —ஆசிரியர்)

இன்னும் நிறைய பணி உங்களுக்கு!

பண்பும் பாசமும் நிறைந்த அய்யா அவர்கட்கு, வணக்கம். நாளை தங்களின் பிறந்த நாள். உணர்வு கொண்ட தமிழர் அனைவரும் இதனை அறிவர். பிறந்த நாளை நாம் என்றுமே ஆர்ப்பாட்டத்துடன் கொண்டாடுவதில்லை. தமிழினத்தைப் பிடித்துள்ள இருள் நீங்கி, என்று தமிழனுக்கென்று தனிநாடு கிடைக்கிறதோ அன்றுதான் நாம் பிறந்த நாளைக் கொண்டாடுதல் முறையாகும். அதுவரை நாம் கொண்டாடும் எந்த விழாவும் மன நிறைவுடன் அமையாது.

'விடுதலைக் குயில்கள்' அமைப்பின் மூலம் கூட்டப்படவிருந்த 'தமிழர் ஒற்றுமை மாநாடு' தடை செய்யப்பட்டுப் பலரும் தளை செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் தங்கள் பிறந்தநாள் வருதல் 'தங்களுக்கு இன்னும் நிறைய பணி இங்கு உள்ளது' என்பதைத் தமிழ்த்தாய் தங்களுக்கு நினைவு படுத்துகிறாள் என்றே எண்ணுகிறேன்! தமிழினம் ஒன்றுபட - விடுதலை பெற ஓரணியில் நிற்போம்! வெல்வோம்! தங்களை வாழ்த்த அகவையில்லை, வணங்குகிறேன். என்றும் அன்புடன்,

—ச. த. க. தமிழ்விரும்பி, அம்மையார்குப்பம்.

தென்மொழி

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

ஆண்டுக் கட்டணம்	:	உருபா	36.00
அரையாண்டுக் கட்டணம்	:	,,	18.00
தனியிதழ்	:	,,	3.00

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின்
கொள்கைகள் அடங்கிய மாத இருமுறை இதழ்.

தனியிதழ்	விலை	உரு.	1-50
ஆண்டுக் கட்டணம்	,,	,,	36-00
அரையாண்டுக் கட்டணம்	,,	,,	18-00

தென்மொழி, தமிழ்நிலம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.

நாருசிரியம்

பெருஞ்சித்திரனார்

பாட்டு ; ௬௬ (தொடர்ச்சி)

தாணுவின் குடும்பத்தவர்கள் இந்திய அமைதிப் படையின-ரால் அழிக்கப்பட்டனர்: தாணுவும் அவர்களால் கொடுமையாகக் கற்பழிக்கப்பட்டவள். இந்தக் கொடுஞ் செயல்கள் தாம் அவளைப் பழிவாங்கும் உணர்வுக்குத் தள்ளின எனின் அது மிகையாகாது.

அமைதிப் படையினர் இவ்வாறு தனக்கும் தன் குடும்பத்தி-னர்க்கும் மட்டுமல்லாமல் பல நூறு குடும்பங்களுக்கும் தீங்கு செய்தது. தாணுவால் பொறுத்துக் கொள்ள முடியாத வல்-லுணர்வை அவளுக்குத் தந்திருக்க வேண்டும்:

தன் உற்றார் உறவினர் உயிர் அழிவிற்கும், தன்னுடைய மான அழிவிற்கும், அமைதிப் படையினர் காரணமானவர்களாக இருந்தாலும், அவர்களைப் பழிவாங்குவது தனக்கு இயலாது எனக் கண்டாள், தாணு: எனவே, அவர்களைத் தமிழீழத்திற்கு அனுப்பி வைத்து, இந்நிலையை உருவாக்கிய இந்தியத் தலைமை-யமைச்சர் இராசிவே முழுவதும் பழிவாங்கத்தக்கவர் என, தாணு உறுதி கொண்டிருக்க வேண்டும்:

தனக்கு மட்டும் நேர்ந்த துன்பமாக இதைக் கருதாமல், தன்னைப் போல் உள்ள பலர்க்குமே நேர்ந்த துன்பமாக அவள் கருதியது அவளின் தாய்மை உணர்வை நினைவு கூர்வதற்கு உதவியது: எனவே, அவள் அன்னைக் குலத்தைத் சேர்ந்தவள் என்று நினைவு கூரவேண்டுவதாயிற்று:

அன்னைக் குலத்து ஓர் அறங்கூர் மறத்தி : (பிறர் துன்பத்-தையும் தாங்கிக் கொள்ளும் சிறப்புப் பெற்ற) தாய்மைக் குலத்துத் தோன்றிய, அறவுணர்வு கூர்தலுற்றுப் படிநிலை வளர்ச்சி பெற்று மறவுணர்வாக முதிர்ந்து நின்ற ஒரு மறத்தியாகிய தாணு:

அறம்—மாந்தவுணர்வின் முதிர்ச்சியுற்ற பண்பாடு. மறம்—துணிவின் முதிர்ச்சி; இந்த இரண்டு உணர்வுகளும் மாந்த உயி-ரியக்கத்தின் ஆக்கத்திற்காகப் பயன் தருவன ஆகையால், இயற்கை உணர்வுகளாம்: மறம் எல்லா உயிர்களுக்கும் பொதுவானது:

முரண்பாட்டுணர்வாக முகிழ்த்து, எதிர்ப்புணர்வாக வளர்ந்து, வீரவுணர்வாக மறுமலர்ச்சியுற்று, மறவுணர்வாக முதிர்வடைவது, மறத்தின் படிநிலை வளர்ச்சி. முதலிரு உணர்-வுகளும் ஐயறிவுத் திணைகளுக்கும், இறுதியிரண்டு மட்டுமே ஆறறிவு மாந்தர்களுக்கும் உரியனவாக இருக்கின்றன.

வீரம் அறவுணர்வுடன் இணைந்து இயங்கும் பொழுது மறமாக விளங்கித் தோன்றுகிறது. இனி, அறவுணர்வே படிநிலை வளர்ச்சியுற்று மறமாக மாறுவதுண்டு. அக்கால் அவ்வுணர்வு செயற்கரிய வீரச் செயல்களைச் செய்யும். போர்க்களத்தில் வீரர்கள் ஒருவர்க்கொருவர் பொருதிக் கொள்வது வீரவுணர்வாகவே கொள்ளப் பெறும். அறங் கலந்த வீரமே மறம் என்பதைத் திருவள்ளுவரும் ஒப்புவர்.

> அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
> மறத்திற்கும் அஃதே துணை. —76

அன்பும் பண்புவினையுமே அறம் ஆகையால், மறவுணர்வுக்கும் அன்பு அடிப்படையாக உள்ளது.

தானு, தன் இன மக்கள் மேல் வைத்த அன்பு தொண்டுணர்வாக (அறவுணர்வாக) மலர்தலுற்றுத், துணிவுற்று, வீரமாகி, மறவுணர்வாகக் காழ்த்து, தன் இனத்துக்குத் தீங்கு செய்த இராசீவை ஒழித்துக்கட்டுமளவிற்குச் செயலுருவம் கொண்டது என்க.

அறவுணர்வு கூர்தலுற்று (பரிணமம் உற்று) மறவுணர்வாகக் காழ்த்து நின்றதால், தானு அறங்கூர் மறத்தி எனப்பெற்றாள்.

அவள் இராசீவைக் குண்டால் தகர்த்தது கொடுமை என்று தமிழின எதிரிகள் கூறுவது வரலாறு தெரியா வெறுங்கூற்றாகும். அஃது ஓர் அறமான செயலே. அவள் செய்த கொலை அறவுணர்வு பொங்கியெழுந்து மறமாகி நின்று, செயல் கொண்டதன் விளைவாகும்: அது தவறோ தண்டனைக்குரிய குற்றமோ அன்று. அவள் பின்னர் செய்யப் போகும் இராசீவ் அழிவுக்கு முன்னர் கூறிய அமைவாக நிற்பது அறங்கூர் மறத்தி சொற்றொடராகும்.

'தானு'வென் பெயரினள் — தானு என்னும் பெயரை உடையவள். தானு என்னும் சமற்கிருதச் சொல்லுக்குக் காற்று, வெற்றியுடையவர் — என்பன பொருளாம்.

தன்னினம் அழித்த வீணன் — தானுவின் இனமாகிய ஈழத்தமிழினத்தை அழித்திடச் செய்த வீணான செயலைச் செய்தவன் என்பது ஒரு பொருள்; இன்னொரு பொருள் வீழப்போகிறவன் (வீழ்நன் - வீணன்; ஒ.நோ: வாழ்நன் - வாணன்.) என்பது. இச்சொல் தானுவால் வீழ்ந்து அழிந்தவன் என்னும் பொருளையும் முற்காட்டித் தந்தது என்க. இராசீவின் பெயரைக் குறிப்பிட விரும்பாமல் வீணன் என்றது, அவரது கொடிய தன்மையினால் என்க.

வீணனுக் கெதிரா வெகுண்ட வெஞ்சினம் — அந்த இராசீவ் என்னும் வீணனுக்கு எதிராக, தானு வெகுண்டு எழுச்சி கொண்ட கடுஞ்சினம். வெகுளுதல் இயல்பான சினம்; வெஞ்சினம் வெம்மையான சினம்; அழிவை உண்டாக்குவது ஆகலின் வெப்பம் சுட்டப்பெற்றது.

நெஞ்சினும் உயிரினும் நிலைத்த நினைவொடு —(உடலுறுப்பாகிய) நெஞ்சாங்குலையிலும், மூல உறுப்பாகிய உயிரியக்கத்திலும் நிலைப்பட்டுவிட்ட அழிக்க முடியாத நினைவுடன். என்னை? நெஞ்சில் நினைவாக நிற்கும் ஓர் உணர்வு, ஒருகால் மறந்து போதற்குரியதாகலின், நெஞ்சில் பற்றிய வெஞ்சினம், பழிதீர்க்கும் வஞ்சினமாகி, உயிருணர்விலும் பற்றி நிலைகொண்டு விட்டது என்க. நெஞ்சில் வெஞ்சினமாகி நிலைகொண்ட வஞ்சினம், செயல்பட்டுப் பழிதீர்க்கப் படுமுன், ஒருகால் தானுவின் உடல் வேறு வகையில் அழிவுற்று, அத்துடன் அந்நினைவைத் தாங்கிய நெஞ்சாங்குலையும் அழிந்துபடின், அவ்வஞ்சினம் செயல்படாமலே அழிந்து விடக் கூடுமன்றோ? அதன்பின் அவள் கொண்ட வெஞ்சினத்தால் பயனேதும் இல்லையாகின்றதன்றோ? அவ்வாறு இறப்பு ஒருகால் நேர்ந்துவிடின் உடலும், அதன்வழி நெஞ்சாங்குலையும், அதன்வழி அதனுள்ளிருக்கும் 'இராசீவ் என்னும் கொடியனை அழிக்க வேண்டும்' என்ற நினைவும் அழிந்து விட்டாலும், அப்பழிவாங்கும் வஞ்சின உணர்வு உயிரிலும் போய் நிலைத்திருப்பதால், அவ்வுயிர் மீண்டும் பிறவியுற்று, அந்நினைவு அழியாமல், அஃது எடுக்கின்ற மறு உடலுடன், இவ்வுலகத்து இயங்கி, அதே இராசீவைப் பழிவாங்கும் என்பதால் அந்நினைவு உயிரிலும் நிலைத்தது என்று கூற வேண்டியிருந்தது என்க.

ஒரு தனி நின்றே — தானு (துணையாள்கள் யாருமில்லாமல்) தான் ஒருத்தியாகவே (முயன்று) நின்று.

ஒரு சிறு செயலுக்கும், பெரும்பாலார்க்கு ஒரு துணை தேவையாக உள்ளது. 'துணையோ டல்லது நெடுவழி போகேல்' என்று சான்றோரும் கூறினர். ஆனாலும், ஒரு படையாகப் போய்த் தாக்கி அழிக்க வேண்டிய வலிமை வாய்ந்த அரசராக நின்ற ஒருவரைத் தான் ஒருத்தியாகவே நின்று அழித்த துணிவையும் வீரத்தையும் வியந்து பாராட்டிக் கூறியது என்க.

ஊர் நடு சிதைத்த — (வேறு எங்காவது சந்திலோ பொந்திலோ, அறையிலோ, சிறையிலோ அல்லாமல்) ஊர் மக்களும் காவலரும் கூடியிருந்த பெருங் கூட்டத்தின் நட்ட நடுவில் எதிரியைச் சிதைத்த; சிதைத்தல்—உருவே தெரியாமல் சிதையச் செய்தல்.

தானு, தன் இனத்திற்கு அழிவைத் தேடும் கொடியவன் இராசீவை ஒழித்திட வெஞ்சினம் கொண்டு, இலங்கையினின்று இந்தியா வந்து, தமிழகத்திற்கு வந்த அவரை, தனித்த ஒருத்தியாக முன் நின்று ஊர் மக்களும், காவலர்களும் நிரம்பியிருந்த பெருங் கூட்டத்திற்கு நடுவில், தன் உடலில் வெடிகுண்டைப் பிணித்துக் கொண்டு, அவரை அணுகிக் குண்டை வெடிக்கச் செய்து, இராசீவை அழித்ததோடின்றித் தன்னையும் அழித்துக் கொண்டாள். இது வெறும் வெறியுணர்வால் வரும் செயலன்று; மிகப் பெரும் ஈகவுணர்வால்தான் இவ்வாறு செய்தற்கியலும், தானும் அழியப் போகிறோம் என்று ஓர் இன்றியமையாத

செயலில் ஈடுபடும் செயல், குறைத்து மதிப்பிற்குரிய செயலன்று; அது செயற்கரிய ஈகச் செயலே.

போர்க்களத்தில் தன் நாட்டுக்காக உயிர் துறக்கும் ஒருவர், உயிர் துறப்பது உறுதி என்று எண்ணிக் கொண்டு போவதில்லை; ஆனாலும் அது வீரமென்றும் ஈகமென்றும் போற்றப் பெறுகின்றது; ஆனால் தானுவோ தான் செய்யப் போகின்ற செயலால் தன் உயிர் போவது உறுதி என்று நன்றாகத் தெரிந்தே அச்செயற்கரும் செயலைச் செய்தவள் ஆகின்றாள். எனவே, உலகத்தில் இத்தகைய ஈகம் பெரிதும் புகழுக்குரியதாகும்;

ஈகம் அன்றோ ஈகம் — இத்தகைய ஈகம் (தியாகம்) அன்றோ ஈகம்: இச்செயல்தான் தன் இன மக்களைக் காக்க, தன் உயிரை ஈதல்; பிறிதெல்லாம் உயிரை இழத்தல். இழத்தல் ஈகமாகாது; அதில் விருப்பம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் இதில் விரும்பியே உயிரிழத்தலால் இவ்வகை ஈகம் பிற வகை ஈகங்கள் அனைத்திலும் பெரிதாகும் என்று உணர்தல் வேண்டும்;

ஆகுமோ உலகு அவள் அழிவிலாப் புகழ்க்கே—இவ்வாறான அருஞ் செயல் செய்து, ஈகத்தின் வடிவமாக இருந்து, தானு என்னும் இலங்கைத் தமிழ்ப் பெண் பெற்ற அழிவில்லாத புகழ்க்கு இவ்வுலகே ஈடாகாது என்க.

உலகம் ஈடாகாது என்பது, உலகின் புகழ்த் தன்மையை நோக்கி என்க;

உலகம் பெரும் புகழுடையது; நிலைத்த புகழுடையது; ஏனெனில் உலகில் உள்ள பொருள்கள், உயிர்கள் அனைத்தும் அழிந்த பின்னர்தான் உலகம் அழிதரும். எல்லாம் அழிந்தும், தான் இருக்கின்ற பெருமை-புகழ்-இவ்வுலகத்திற் குண்டு என்பார் திருவள்ளுவப் பேராசான் (336), அதனால் அனைத்துப் புகழினும் உலகே நிலைத்த புகழுடையது. இறுதி உயிர் அல்லது மாந்தன் அழியும் வரை உலகின் புகழ் நிலைத்திருக்கும்.

ஆனால், தானுவின் ஈகம், உலகின் நிலைத்த புகழினும் நிலைத்த புகழுடையது: அஃதாவது உலகம் உள்ளளவும் தானுவின் புகழ் நின்று இலங்கும் என்பது உறுதியால் அவள் புகழ்க்கு அவ்வுலகின் புகழும் ஈடாகாது எனப் பெற்றது என்க;

இனி, நேற்றிருந்த ஒருவர் இன்றில்லை என்னும் பெருமையை இவ்வுலகம் உடையது அன்றோ. அக்கூற்றுக்கு ஏற்ப, நெருநல் இருந்த இராசீவ் போல் பெருமை பெற்ற ஒருவர், மறுநாள் இல்லாமற் போன தனிப் பெருமையை இவ்வுலகம் பெறுமானால் அப்பெருமையை உலகிற்கு உண்டாக்கிக் கொடுத்தவள் தானு அன்றோ! தமிழினத்தை அழித்தவனை அழித்து தானு பெற்ற புகழ் உலகில் உள்ள தமிழரெல்லாரும் ஒப்பத் தகுந்த பெருமை வாய்ந்தது என்க;

அரசியல் உலகில், பல வகையான சூழ்ச்சிகள் செய்தும், மக்கள் பணத்தைத் தவறாகக் கொள்ளையிட்ட பெரும் பொருளைச் செலவிட்டும், சாதி மேலாண்மையாலும், மத மேலாண்மையாலும் இந்திய ஆட்சியில் உயர் பதவியில் அமர்ந்து, தமக்கு வேறான—மாறான—தமிழினத்தை அடியோடு ஒழிக்கக் கருதிப் பல அழிவுகளையும் அழிம்புகளையும் செய்து கொண்டிருந்த இராசீவ் என்னும் அறக்கொடியவர் ஒருவரை, அவரால் ஏவி விடப் பெற்ற அமைதிப் படையினரால், தன்னினமும், தன் குடும்பமும், தானும், அழிவும் இழிவும் பட்ட கொடுந் துன்பத்தால் வீறு கொண்டு, பழி வாங்கும் அறஞ்சார்ந்த மறவுணர் வெழுச்சியுடன், தமிழகம் போந்து, தானே ஒருத்தியாய் நின்று, தன்னுடலில் கடுமையான வெடிகுண்டு ஒன்றைப் பிணித்துக் கொண்டு, தற்கொலைப் படையுறுப்பாகித் திருப்பெரும்புதூரில் 1991 மே மாதம் 21-இல் நடந்த தேர்தல் பொது நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்திருந்த அவரை நெருங்கிக் குண்டை வெடிப்பித்து, அவரையும் சிதைவுறச் செய்து, தானும் உயிரழிந்து போன, பெருந்தமிழ் மறத்தி, இன மீட்புக் கருதித் தன் வாழ்வையே இழந்து கொண்ட, வீராங்கனை-தானு என்னும் தமிழீழத்தைச் சார்ந்த இளம் பெண்ணின் ஒப்பிடற் கரிய ஈக (தியாக) த்தைப் புகழ்ந்து பாடியதாகும் இப்பாடல்.

இது, மூதின் முல்லை என் திணையும் அறங்கூர் மறம் என் துறையுமாகும். துறை புதியது. ○

உடனே வாங்கிப் பயனடையுங்கள்!

பனப்பாக்கம் புரட்சிப் பாவேந்தர் பேரவையின் சிறந்த வெளியீடுகள்.

ஒலியிழைகள் **(AUDIO TAPS)**

1. களத்தில் கேட்கும் கானங்கள்—
(விடுதலைப் புலிகளின் பாடல்கள்: டி. எம். சவுந்தரராசன், பி. சுசீலா, வாணி செயராம், சித்ரா, இராசேசுவரி முதலியோர் பாடிய பத்துப் பாடல்கள்: வரலாற்று முன்னுரையும் இனிய பின்னிசையும் கொண்டவை.) விலை : 30-00
2. பாவேந்தர் பாரதிதாசன் பாடல்கள்.
(தேனிசைச் செல்லப்பா பாடியவை) விலை : 30-00
3. பாவலரேறு பெருஞ்சித்திரனார் (முதல் பகுதி)
('தமிழின வழிகாட்டிகள்' என்னும் வரலாற்று வரிசையில் முதல் வெளியீடாகப் பாவலரேறு அவர்களைப் பற்றி, சொல்லாய்வறிஞர், செஞ்சொற் கதிரவன் ப. அருளி அவர்களின் கருத்தாழமிக்க, திறனாய்வு எழுச்சியுரை.) விலை : 30-00

பதிவு அஞ்சல் செலவு தனியாக உரு 10-00

புரட்சிப் பாவேந்தர் பேரவை, பனப்பாக்கம் : **631 052.**

தமிழின் உயர்ச்சியும், சமற்கிருதத்தின் தாழ்ச்சியும் !

—குடந்தை, வீரா. இராசகோபாலன், கீ.க.இ; கூமுூ

தமிழில் வரிவடிவங்கள் குறைவு ; சமற்கிருதத்தில் மிகுதி !

தமிழில் உயிர் வரிவடிவங்கள் 12, மெய் வரிவடிவங்கள் 18, அகர உயிர்மெய் வரிவடிவங்கள் 18, இகர உயிர்மெய் வரிவடிவங்கள் 18, ஈகார உயிர்மெய் வரிவடிவங்கள் 18, உகர வுயிர்மெய் வரிவடிவங்கள் 18, ஊகார உயிர்மெய் வரிவடிவங்கள் 18, உயிர்க்குறி வரிவடிவங்கள் 4, ஆய்த வரிவடிவம் 1 ஆக, 125 வரிவடிவங்கள் நினைவிற் கொள்ள வேண்டியவையாகும். சமற்கிருதத்தில் உயிர் வரிவடிவங்கள் 15, மெய் வரிவடிவங்கள் 35, உயிர்க்குறி வரிவடிவங்கள் 14, கூட்டொலி வரிவடிவங்கள் 52, அடையாளங் கண்டு கொள்ள 46 வரிவடிவங்கள் ஆக, 162 வரிவடிவங்கள் நினைவிற் கொள்ள வேண்டியவையாகும்.

சமற்கிருதத்தில் எண், பால், திணைக் குழப்பங்கள் !

தமிழில் உயர்திணை, அஃறிணை எனும் திணைப் பாகுபாட்டு முறையில் பெயர், வினைச் சொற்கள் அமைந்துள்ளன; சமற்கிருதத்தில் இவ்வாறன்று ; சமற்கிருதத்தில் திணைப் பாகுபாடு இல்லை. பெரும்பாலும் லிங்கம் (பால்), வஜனம் (எண்), விபக்தி (வேற்றுமை) முறையில் பெயர், வினைச் சொற்கள் அமைந்துள்ளன ; இதனால் அம்மொழியைக் கற்பதில் பெரும் இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன.

தமிழில் திணைப் பாகுபாடு முறையில் ஆண்பால், பெண்பால், பலர்பால் உயர்திணையெனவும், ஒன்றன்பால், பலவின்பால் அஃறிணையெனவும் பால் பகுப்புப் பெற்றுள்ளன. சமற்கிருதத்தில் திணைப் பாகுபாடில்லாமையால், பொதுவாக பும்ஸலிங்கம் (ஆண்பால்), ஸ்த்ரீ லிங்கம் (பெண்பால்), நபும்ஸக லிங்கம் (அலிப்பால் - ஆண், பெண்பால் வேறுபாடு காட்டாப் பெயர்ச்சொல்) எனமூவகைப் பால்கள் பெற்றுள்ளன. தமிழில் னஃகான் ஒற்று ஆண்பால் ஈறுகவும், ளஃகான் ஒற்று பெண்பால் ஈறுகவும், ரஃகான், பகர இறுதி, மாரைக் கிளவி (ஆர்) ஆகிய இம் மூன்றும் பலர்பால் ஈறுகவும், த, ற, ட ஒற்றுகளை ஊர்ந்து வந்த குற்றியலுகரங்கள் ஒன்றன்பால் ஈறுகவும், அ, ஆ, வ என வரும் இறுதியையுடைய மூன்று சொற்களும் பலவின் பால் ஈறுகவும், தெள்ளத் தெளிவாக அறுதியிட்டுக் கூறப்பட்டுள்ளன. சமற்கிருதத்தில் மூவகைப் பாலுக்கும் தெள்ளத் தெளிவாக அறுதியிட்டுக் ஈறுகள் கூறப்படவில்லை. அதனால், இடர்ப்படுகின்றனர்; ஒரு வேடிக்கை, சமற்கிருதத்தில் உயிரல் சொற்களுக்கும் (பொருள்களுக்கும்) பால் பகுப்புகள் உண்டு; என்னே வியப்பு ! இம் முறைகளில்தாம் பெயர், வினைச் சொற்கள் அமைந்துள்ளன;

தமிழில் ஒருமை, பன்மை என எண் பாகுபாடு பெற்றுள்ளன;

சமற்கிருதத்தில் ஏக வஜனம் (ஒருமை), த்துவி வஜனம் (இருமை) பகு வஜனம் (பன்மை) என மூன்று வகை என் பாகுபாடு பெற்றுள்ளன. இம் முறைகளில்தாம் பெயர், வினைச் சொற்கள் அமைந்துள்ளன, இன்னும் உள்ளுக்குள்ளே அகலமாகவும் ஆழமாகவும் புகாது விரிவஞ்சி, இந்த அளவோடு நிறுத்துகிறோம்.

சமற்கிருதம் குறை உடைய மொழி என்று எவரும் திறனாய (விமர்சிக்க)க் கூடாது என்பதற்காகத் தெய்வ மொழி, தேவ மொழி, வேத மொழி எனக் கூறி, திறனாய்ந்(விமர்சித்)தால் தெய்வப்பழி (நிந்தனை), தேவப்பழி (நிந்தனை) வேதப்பழி (நிந்தனை) என மிரட்டுகிறார்கள்.

செல்வமொழிக்கு வறியமொழி உதவமுடியுமா ?

மொழி ஆய்வு அறிஞர் பெருமக்கள் செழுமையான-செம்மையான இலக்கணம் படைத்த செந்தமிழ் மொழி "உயர்தனிச் செம்மொழி" என்றனர். 'கையிலே காசில்லாத வறியவன் வளமுள்ள பிறர்க்குக் கடன் கொடுத்தேன்' எனக் கூறுவது போன்று, 'செழுமையான - செம்மையான இலக்கணம் உடைய செந்தமிழ் மொழி வளர்ச்சிக்குச் செழுமையற்ற - செம்மையற்ற இலக்கணம் உடைய-செத்த-வாழ்விழந்த-வழக்கிழந்த சமற்கிருத மொழி உதவுகிறது' என்று சொல்வது எவ்வளவு பேதைமை. சமற்கிருதமொழிக் கூட்டுறவால் தமிழ் மொழி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் எனச் சிதைந்தது; வடக்கேயும் இந்நிலையேதான். சமற்கிருதமொழிக் கூட்டுறவால் தமிழ்மொழிக்கு விளைந்த வினை, தளர்ச்சி.

சமற்கிருதம் பயிற்றுவிப்பதில் இயலாமை !

தமிழ்மொழி வகுப்புகளில் பாடங்கள் முழுமையாகத் தமிழில் நடத்தப்படுகின்றன. சமற்கிருதமொழி வகுப்புகளில் பாடங்கள் முழுமையாகச் சமற்கிருதத்தில் நடத்தப் பெறுவதில்லை. பெரும் பகுதி விளக்கக் குறிப்புகள் (comments) ஆங்கிலத்தில் அளிக்கப் பெறுகின்றன. ஏன்? குறிப்புகளடங்கிய நூலில் கூட (commentary or Notes) ஆங்கிலம் ஆட்சி செய்கிறது. தேர்வுகளிலும் இதே போக்கு(கதி)தான். வினாத்தாளே ஆங்கிலம்; விடையும் ஆங்கிலம். இங்ஙனமிருக்க, இம் மொழி நம் அருந்தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பெருந்துணைபுரிகிறது என்று சொல்வது எத்தகைய அறியாமை. வளர்ந்த மொழிக்கு, வளராத மொழி, வளர உதவுகிறது எனக் கூறுவது என்ன வேடிக்கை ! வருத்தம் ! (வேதனை) ! வாழ்விழந்த - வழக்கொழிந்த மொழி, வாழும் மொழிக்கு வாழ்வளிக்கிறது எனக் கூறுவது எவ்வளவு மடமைத் தனம்—பைத்தியக்காரத்தனம்;

தமிழ்ச் சொற்களைச் சமற்கிருதச் சொற்கள் எனல் :

மாலை, சாலை, கலை, பூசை எனும் சொற்கள் சமற்கிருதச் சொற்கள் அல்ல ; தமிழ்ச் சொற்களே; தொல்காப்பிய நூற்பா :

"கதந பமஎனும் ஆவைந் தெழுத்தும்
எல்லா உயிரொடுஞ் செல்லுமார் முதலே" (தொல்: எ. 61)

"சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அஐ ஒளஎனும் மூன்றலங் கடையே" (தொல். எழுத். 62)

பார்ப்பான், அந்தணன் எனும் சொற்கள் ஆரியச் சொற்கள் அல்ல; தமிழ்ச் சொற்களே. திருக்குறள்

"மறப்பினும் ஒத்துக் கொளலாகும்; பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்" (ஒழுக்க. 134)

"அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்" (நீத்தார். 30)

ஒரு பொருளைக் குறித்துவரும் பல சொல்லாயும், பல பொருளைக் குறித்துவரும் ஒரு சொல்லாயும் என இருவகைப்படும் என்று கூறுவர். தொல்காப்பிய நூற்பா :

"ஒரு பொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
இருபாற் றென்ப திரிசொற் கிளவி" (தொல். சொல், 399)

எனவே இடம் நோக்கிப் பொருள் காணுதல் அறிவுடையார் செயல். திருக்குறள் :

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்" (நீத்தார். 28)

தமிழைச் சிறுமைப் படுத்துவதே பார்ப்பனியம் !

எல்லாமே பிறமொழியிலிருந்து (வடமொழியிலிருந்து) வந்தது எனக் கூறித் தமிழ்மொழியை இழிவுபடுத்துவதில்—சிறுமைப்படுத்துவதில் பார்ப்பனர்களுக்கு எவ்வளவு பெரிய இன்பம் ! "தமிழில் வடமொழி" எனும் கட்டுரை தமிழின் மேல் உள்ள வெறுப்பையும், வடமொழியின் மேல் உள்ள வெறியையும் காட்டுவதாகும்.

"அடிப்படையில் புவி அமைப்பு முரண்பாடாக இருப்பதைச் சரித்திர முரண்பாடாகக் காணும் போதுதான், அரசியல் விளையாட்டு ஆரம்பமாகின்றது" என்கிறார் இந்திரா பார்த்தசாரதி. இவருக்குப் நில(புவி)யியலைப் பற்றியும் தெரியவில்லை; வரலாற்றைப் பற்றியும் தெரியவில்லை; நில(புவி)யியல் வேறு; வரலாறு வேறு. நிலவியல் தட்ப வெப்பப் பாங்கால், நடை, உடை, பாவனை, பழக்க வழக்கங்களை உணர்த்தும். வரலாறு நடந்தவற்றை எடுத்துக் கூறும்.

பார்ப்பன வலக்காரம் :

"சரித்திரம் ஒரு குப்பைத் தொட்டி' என்றார் ஹென்றி ஃபோர்ட்" என்று குறிப்பிடுகிறார். இதன் உட்பொருள் அவருக்குப் புரியவில்லை. குப்பைத் தொட்டியில் இருப்பதுதான் எருவாகிறது; எரு உணவாகிறது; பின் உணவு எருவாகிறது. இதை அறிவியல் சுழற்சி (குணபம்) என்பர். அதே போன்று வரலாறு வீழ்ந்த குமுகாயத்துக்கு எருவாகி எழுச்சி பெறச் செய்கிறது. இதைப் புரிந்து கொள்ள முடியவில்லை அவர்க்கு.

''இந்திய மொழிகளில், அநேகமாக எல்லாவற்றுக்கும் வல்லின மெய்களுக்கு வர்க்க ஒலிகள் இருக்கும் போது, தமிழில் அவை இல்லாதஹைத ஒரு முக்கிய காரணமாக, போலிஷ்-இந்திய மொழி அறிஞர் ஒருவர் என்னிடம் குறிப்பிட்டார்'' என்று குறிப்பிடுகிறார். கே. எம். பணிக்கர், ஹென்றி ஃபோர்ட், டாக்டர் ஹீராலால், மாக்ஸ் முல்லர் என்று பல பெயர்களைக் குறிப்பிடுகிறவர், தம்மிடம் நேரடியாகக் குறிப்பிட்டவரின் பெயரை ஏன் குறிப்பிடவில்லை? இதுதான் பார்ப்பனர்களுடைய திறமை: அவர் சொன்னார்; இவர் சொன்னார் என்று பிறர் மேல் சாற்றித் தம் கருத்தை வலக்காரமாக (சாதுரியமாகத்) திணிக்கும் செயல். இ'து ஈராயிரமாண்டுகளுக்கு மேலாகச் செய்து வரும் வேலை: தமிழில் வர்க்க ஒலிகள் இல்லாததனால் என்ன கெட்டுப்போய் விட்டது?

மொழியியலறிவு (Linguistics) இல்லாதவர்களெல்லாரும் பெயருக்கு ஆசிரியர் - பேராசிரியர்களாக இருக்கிறார்களே அது-தான் வருத்தம்! எடுத்துக்காட்டாகத் தமிழில், கந்தன்-க முதல் வர்க்க ஒலி; பகடு-க இரண்டாவது வர்க்க ஒலி; தங்கம்-க மூன்றாவது வர்க்க ஒலி; நடக்க- க நான்காவது வர்க்க ஒலி. இது புரியாது புலம்புகிறாரே. ஒரே ஒலி இடம் நோக்கி இயல்பாக நான்கு வர்க்க ஒலிகளையும் ஒலிக்கிறது. இதுதான் தமிழின் தனிச் சிறப்பு: இதற்குப்போய் வலிந்து கொள்வானேன்? சமற்கிருத மொழியாளர்கள் சமற்கிருதத்துக்கு உரிய ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ ஆகிய ஒலிகளையும், வரட்டு வர்க்க ஒலிகளையும் விலக்கி, இயல்பாக ஒலிப்பதென்று செயல்படுவார்களேயானால், தமிழ் ஒலியைத் தவிர, வேறு ஒலியை ஒலிக்க இயலாது: தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மற்றைய திராவிட மொழியாளர்களும் ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ ஆகிய ஒலிகளையும், வரட்டு வர்க்க ஒலிகளையும் விலக்கி இயல்பாக ஒலிப்பதென்று செயல்படுவார்களானால் அவர்களும் தமிழ் ஒலியைத் தவிர, வேறு ஒலியை ஒலிக்க இயலாது. இஃது ஆரியத்துக்கும் பொருந்தும்: இ'து உண்மை; கற்பனை அன்று. எனவே, இங்ஙனம் செயல்படுவார்களானால் ஓரின ஒருமைப்பாடு உருவாகி, நாடு சிறப்புற்றோங்கும்:

தூங்கும் புலியை எழுப்பாதே!

''தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா'' என்ற கட்டுரைத் தலைப்பு எழுச்சிமிக்க தலைப்பு: ஆனால், குழப்ப-மான - தடுமாற்றமான - தெளிவற்ற கட்டுரை: பார்ப்பன நண்பர்களுக்குப் பணிவன்பான வேண்டுகோள். இங்கிலாந்து நாட்டில் தலைமையராய் இருந்த வால்போலின் அயல் நாட்டுக் கொள்கை ''தூங்கும் நாயை (அடிமைப்பட்ட மக்களை) எழுப்-பாதே'' என்பதாகும்: இதைச் கைக் கொண்டு செயல்படுவார்-களானால், அவர்களுக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது: இல்லையெனில் சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி என்ற நிலைதான் ஏற்படும்: ○

பறவைகள் மாநாடு!

நாடக ஆக்கம் : —அதியமான்

(பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் 'பாவியக் கொத்தில்' 4-ஆவது பாவியம்)

(கவனக் குறிப்பு : இதற்கு முந்தைய பகுதி, சென்ற இதழ் 25, 26-ஆம் பக்கங்களில் அச்சாகியுள்ளது. ஆனால் அதற்குத் தலைப்பும் தொடர்ச்சியும் இல்லை. அன்பர்கள் அதையும் சென்ற இதழ்க்கு முந்தைய தொடருடன் இணைத்துப் படித்துக் கொள்ளவும்.)

காட்சி. 3

உறுப்பினர் : கழுகரசன், பறவைக்கூட்டம், பெயரறியாப் பறவைக் குரல், குயில், காக்கை, வௌவால்

இடம் : பொதிகைமலை ஆலமரம்.

காலம் : காலை.

கழுகு : (எழுந்து) என்னருமைப் பறவை இனங்களே, உங்களுக்கு என் வணக்கம்! நான் அழைப்பு விடுத்தேன் இங்குவர. அனைவரும் வந்துவிட்டீர்கள் மகிழ்ச்சி. இப்போது கிளி பேசிய பேச்சை எல்லாம் மறந்து விடுங்கள். அதெல்லாம் பேச்சுக்குச் சேர்த்தியில்லை. இத்தனைப் பறவைகள் கூட்டத்தில் ஒரு கிளி மட்டும், முரண்படப் பேசினால் அதை யாரும் கேட்கப் போவதில்லை. உங்கள் பறவைக் கூட்டங்களிலே என்பேச்சை மதித்து என் நிழலில் வாழ்கின்ற காக்கை, வௌவால் ஆகியவை உள்ளன. அவற்றிற்கு அறிவுதான் இல்லையே தவிர, வாழப் படித்துக் கொண்ட மூளையை உடையவை. கேளுங்கள்...

குயில் : (எழுந்து) மன்னா! ஒரு பேச்சுக்குக் கொஞ்சம் இடங்கொடுங்கள்.

கழுகு : நான் பேசி முடிப்பதற்குள் யாரும் இங்கே குறுக்கே பேசக் கூடாது. நான் பறவை இனங்களின் ஆட்சி உரிமையைப் பெற்றவன் ; (சினமாக) உட்கார்.

குயில் : (உட்கார்ந்து கொண்டது; தனக்குள் குசுகுசுவென்று) அரசனாக வர மட்டும் ஊளன் (நரி) கும்பிடு. இப்போது வீறார்ப்புப் பேச்சு.

கழுகு : கேளுங்கள், நான் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த நல்லாட்சி ஒன்பது திங்கள்கள் ஓடி மறைந்து விட்டன. இங்குமங்குமாகப் பசிப்பிணியால் நோய்ப்பட்டு சில மாண்டாலும், விலங்கினங்-

களால் சிலவற்றிற்குத் தொல்லைகள் பல ஏற்பட்டிருந்தாலும், வில்லால் வேடர்கள் அடித்ததனால் பல மாண்டு மடிந்திருந்தாலும், முட்டைகளைப் பாம்புகள், பல்லிகள் மொய்த்துக் கெடுத்திருந்தாலும், குஞ்சுகளை மக்கள் களவாடிச் சென்றதால் பறவை இனப் பெருக்கம் குறைந்திருந்தாலும், மிச்சம் இருக்கிற நீங்கள் மகிழும் படியாக ஆட்சி செய்கிறேன். அச்சமில்லாமல் நீங்கள் அலைந்து திரிகிறதை எண்ணிப் பாருங்கள். பிறந்த நாட்டில் உணவில்லாவிட்டாலும் பிற நாடு சென்று மாந்தக் கூலிகளைப் போல அலைந்து திரிந்தும் மூன்று வேளை உணவு கிடைக்காவிட்டாலும் ஒரு வேளையாவது உண்ணும்படி செய்திருக்கிறேன். நானென்ன செய்வேன்? என்னாலியன்ற திட்டங்களைப் போட்டு என்னால் ஆன மட்டும் ஆட்சியைச் செப்பமாக நடத்திக் கொண்டிருக்கிறேன். என்னை வாழ்த்திப் பாடிப் புகழ்ந்த வானம்பாடி கூட கோடி காலம் குன்றாமல் வாழ்க என்று கூறியுள்ளதை நீங்கள் அறிவீர்கள். என் ஆட்சியை வெளிநாட்டுப்பறவைகள் பார்த்து விட்டு "ஆகா இதுவன்றோ ஆட்சி" என்று புகழ்ந்து போயிருக்கின்றன. இ'து உண்மை தானே.

குரல் : எதுவும் புகழவில்லை, புளுகு, புளுகு.

பறவைக் கூட்டம் : (கசமுச வென்று ஒலிக்கின்றன)

கழுகு : அங்கே என்ன கூச்சலும் பாய்ச்சலும்?

கூட்டம் : (ஒன்றுபோல்) மரக்கிளைகளின் ஒலி; வேறு ஒன்றுமில்லை.

கழுகு : அப்படியா? சரி, நான் பேசி முடிக்கும் வரை யாரும் எதையும் பேசிக் குறுக்கிடக் கூடாது. வால் இருக்கிறது என்பதால் வாலாட்டக் கூடாது. எச்சரிக்கை. கேளுங்கள், சில வலிமையற்ற புல்லறிவினதுகள் என் ஆட்சியின் மாட்சியைக் காணப் பொறாமைப் பட்டு என் பெருமைக்கு இழுக்கு வரப் பேசி வருகின்றன. இரந்தாகினும் உண்ணமுடியும் என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறேன். இதை உணரத் தெரியாத மூடர்கள், என் ஆட்சியில் எங்கேயாவது கோணல்கள் இருக்கின்றனவா எனத் தேடத் தொடங்கித் தோற்று விட்டார்களெனக் கேள்வி. என் ஆட்சியின் சிறப்பைக் கேட்ட வெளிநாட்டினதுகள், அடிக்கடி அவர்கள் நாட்டிற்கு வரும்படியும் பல திட்டங்களைத் தரவும் என்னை அழைத்த வண்ணம் உள்ளனர். நான் அங்குப் போய்ப் பார்த்து அங்கு

உள்ள திட்டங்களை இங்கும் போட்டுப் பார்க்கிறேன். இதைக் கூட சிலதுகள் குறை கூறி அலுத்துப் போயின. ஏனென்றால் என்னை எதுவும் ஒன்றும் செய்யமுடியாது. இராமர் காலத்திலேயே என் கழுகு இனம் ஆட்சி செய்து இருக்கிறது. இது இராவணனுக்கும் தெரியும். அநுமானும் அறியும். அதனால் நான் சொல்லப் போவது உங்களுடைய நன்மைக்கே.

காக்கை : மன்னன் சொல் மட்டமாக இருந்தாலும் மறுத்துக்கூற இங்கு எதுவுமில்லை. மறுத்தாலும் நீங்கள் ஒப்புக்கொள்ள மாட்டீர்கள் என்று அவர்களுக்கும் தெரியும். அதிகாரத்தை வைத்துக் கொண்டு எதுவும் செய்ய முடியும் என்பது உங்களுக்கும் தெரியும். பறவை இனங்களாகிய எங்களது அச்ச உணர்வை நீங்கள் நன்றாக அறிவீர்கள். அதனால் நீங்கள் எதையும் சொல்லத் துணியலாம். சொல்லப் போகிறீர்கள் சொல்லுங்கள்.

கழுகு : சொல்லுகிறேன் கேளுங்கள். நம்முடைய இந்தியாவின் பறவை இனங்களின் பெருமைகளைப் பேசிப் பேசிக் காதே புளித்துவிட்டது. அவ்வளவு பெருமையை உடையது. நெஞ்சு நம் நாட்டின் பெருமைகளைக் கேட்டுக் கேட்டுக் கரைந்து விட்டது. உலகத்தில் எங்குப் பார்த்தாலும், மூலைமுடுக்குகளிலெல்லாம் பாரத நாட்டின் பழம் பெருமைகளைப் பேசாத நாவே கிடையாது. கேட்காத காதுகளும் இல்லை. நம்முடைய இராமர் கதைகளையும் துரௌபதியின் வீரத்தையும் கேட்டு மல்லாக்க விழுந்து புகழ்ந்து சிரிக்கிறார்கள். அங்குப் பிறந்தோமில்லையே என்று நம் நாட்டுக் கடவுள்களின் கொக்கோக ஆட்டங்களைக் கேட்டுவிட்டு ஏங்குகின்றன. அத்தனைப் பெருமைகளும் நானும் அறிந்தவைதாம். அந்த மரபுகள் போய்விடக் கூடாது என்று இந்தக் காட்டாட்சியைச் செய்து கொண்டிருக்கிறேன்.

வௌவால்: வ்வூ ! வ்வூ ;

கழுகு : அதனால் அனைவருக்கும் ஒன்று சொல்வேன். நான் சொல்வதை நீங்கள் தீயதாக எண்ணி விடக்கூடாது.

காக்கை : அப்படி இந்நாள் வரை தீய செய்தியை நீங்கள் கூறியதாய் நினைவில்லை.

கழுகு : ஆமாம். நமக்கு மறதி மிகுதி ! அதுதான் உங்கள் உள்ளம் சொல்லுமே! நானும் இப்போது சொல்லப் போகும் செய்தியைப் பல ஆண்டுகளாய் இரவென்றும் பகலென்றும் பாராது, மழை வெயிலென்று

எண்ணுது, கண் துஞ்சாது சிந்தித்துச் சிந்தித்து. நல்ல முடிவு எடுத்து உங்களுடைய நன்மையைக் கருதித்தான் இங்கு எடுத்துச் சொல்லப்போகிறேன். அதனுல் வந்திருக்கும் நீங்கள் அனைவருமே உள்ளம் உவந்து ஏற்றுக் கொள்வீர்கள். ஏனென்றால் நம்முடைய ஒருமைப்பாட்டுக்குத்தானே இதைச் சொல்லுகிறேன். நாமெல்லாம் ஒன்று என்ற உணர்வால் இப்படி ஒரு திட்டத்தைக் கூறுகிறேன். நீங்கள் அட்டி சொல்ல மாட்டீர்கள், என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு. என்றாலும் சில பழமை விரும்பிகள் மரபு மரபு என்று அதையுங்கூட சரியாகச் சொல்லத் தெரியாததுகள் உளறிக் கொட்டி மறுத்தாலும் மறுக்கலாம். அப்படிப்பட்டவர்கள் மிகுதியாக இருக்கமாட்டார்கள். விரல்விட்டு எண்ணக் கூடியவர்கள் தாம். அவர்கள் பின்னுல் அவர்களுடைய நிழல் கூடப் போகாது என்பது எனக்குத் தெரியும்.

காக்கை : நிழல் எப்படி மன்னு போகமாலிருக்கும் அ'து இயற்கைக்கு மாருன தாச்சே.

கழுகு : சீ, கருப்பா! உனக்குக் கூட மூளைவேலை செய்யும் போலிருக்கிறது. குறுக்கே பேசாதே. நீ ஆனதால் தான் விட்டு வைக்கிறேன். மிகு கதைப்பி(அதிகபிரசங்கி). பழங்காலக் கதைகள் இளங்காளையர்களுக்குத் தெரியாது. ஆர்ப்பாட்டம் செய்தாலும் அ'து எதற்காக என்பதைத் தெரியாமல் செய்து விட்டு விழிப்பார்கள். இடுக்குப்பிள்ளைகளைப்போல நீட்டிய கைப்பக்கமெல்லாம் போவார்கள். வகை தொகை தெரியாத வாய்க் கொழுப்பர்களுடைய நாக்கை இழுத்து அறுக்க எனக்குத் தெரியும். நான் சொல்லப் போகும் செய்தி புதிதும் அன்று. முன்னேர் எடுத்த முயற்சிதான். அவர்களால் முடியாமல் போய் முகங்கவிழ்ந்து மொட்டை அடித்துக் கொண்டார்கள். (ஓங்கிய குரலில்) ஆனுல் அ'து என்னுல் முடியும் என்று சொல்லுகிறேன்.

வௌவால்: வ்வூ - வ்வூ

(தொடரும்)

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். — அமைச்சர்

இந்திமொழி !

சில புள்ளி விளத்தங்கள் !

- இந்தியாவில் மொத்தம் 1652 தாய்மொழிகள் பேசப் பெறுகின்றன; (1971 மக்கள் கணக்கு)
- இந்திய அரசியல் சட்டத்தில் குறிப்பிடப் பெறுகிற 15 தேசிய மொழிகளில் இந்தியும் ஒரு தேசிய மொழி; (சமசுக்கிருதம் மிக மிகச் சிலரால் (ஏறத்தாழ 500 பேர்கள்) பேசப் பெறும் மொழியானாலும், பார்ப்பனிய வல்லாண்மை ஆட்சியினால் இதுவும் ஒரு தேசிய மொழியாக எண்ணப் பெறுகிறது;
- இந்த 15 தேசிய மொழிகளில் 380 வகையான தாய்மொழிகள் அடங்குகின்றன.

ஃ 15 தேசிய மொழிகளையும் அவற்றின் தாய்மொழிகளையும் பேசுவோர் எண்ணிக்கை.	38,23,30,498;
ஃ மீதியுள்ள 1272 தாய்மொழிகளைப் பேசுவோர் எண்ணிக்கை;	54,80,000;
ஃ இந்தி மொழியையும் அதைச் சார்ந்த பிற தாய்மொழிகளையும் பேசுவோர் தொகை.	13,34,33,207
ஃ மற்ற 14 தேசிய மொழிகளையும் அவற்றைச் சார்ந்த தாய்மொழிகளையும் பேசுவோர் தொகை;	24,88,97,291
ஃ இந்திமொழியைப் பேசக் கூடிய மொத்தம் 13,34,33,207 பேர்களில் இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள்;	93,63,068
ஃ எனவே இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களும், இந்தி பேசத் தெரிந்தவர்களும்;	14,24,96,275
ஃ அஃதாவது மொத்த மக்கள் தொகையில் இந்தி பேசத் தெரிந்தவர்கள்.	27%

(இந்தியாவின் மக்கள் தொகை மொத்தம் 52.74 கோடியாக இருந்த பொழுது வெளிவந்த புள்ளி விளத்தங்கள் இவை. இன்று மக்கள் தொகை தோராயமாக 75 கோடியாக உள்ளது; அதற்குத்தக புள்ளிகள் இன்று மாறினாலும் பொது நிலை ஒன்றுதான்;)

ஃ இந்தி மூன்று வகை :
அவை, மேலை யிந்தி (மேற்குப் பகுதி இந்தி)
கீழை இந்தி (கிழக்குப் பகுதி இந்தி)
பீகாரி.

ஃ மேலையிந்தி : 5:

1) கங்கை ஆற்றுக்கு மேற்கிலும் பஞ்சாபுக்குத் தென் கிழக்கிலும் பேசப் பெறுவது:	பாங்காரு;
2) வட மதுரையிலும் அதைச் சூழ்ந்த இடங்களிலும் பேசப் பெறுவது:	பிரஜபாஷா
3) கங்கைக்கும் யமுனைக்கும் இடையில் உள்ள தெற்குப் பகுதியில் பேசப் பெறுவது:	கனோஜ்;
4) பந்தல் கண்டிலும் நர்மதை ஆற்றை அடுத்த பகுதியிலும் பேசப் பெறுவது:	பந்திலி;
5) தில்லியிலும் அதைச் சார்ந்த ஊர்களிலும், உத்திரபிரதேச மேற்கு மாவட்டத்திலும் பேசப் பெறுவது:	கரிபோலி:

(கரிபோலியிலிருந்துதான் உருதுவும் இந்தியும் உருவாயின என்று சொல்லப் பெறுகிறது.)

ஃ கீழை இந்தி : 3. (1) அவதி, (2) பகேலி, (3) ?;
1) அவதி : அயோத்தியில் வழங்குவது முதன்மையானது;
2) பகேலி : பற்பல சிறுசிறு இடங்களில்;
3) ? : விளக்கமில்லை;

ஃ பீகாரி : 3: (1) மைதிலி, (2) போஜ்புரி, (3) மாகதி;
1) மைதிலி : இது கங்கையாற்றின் வடக்கே மிதிலை நாட்டில் வழங்கப் பெறுவது;
2) போஜ்புரி : பீகார் பகுதிகளில் வழங்குவது.
3) மாகதி : வேறு சில இடங்களில் வழங்கப் பெறுவது;

ஃ இக்கால் உள்ள இந்திமொழி நூல்கள் எல்லாம் மைதிலி என்னும் வகை இந்தியில்தான் எழுதப் பெறுகின்றன; ஆனாலும் கரிபோலி என்னும் இந்தி இலக்கிய வழக்குடையதாகக் கருதப் பெற்றாலும், அவதி, புண்டலி, இராசத்தானின் பழைய மார்வாரி, மைதிலி, போஜ்புரி ஆகிய மொழிகளும் இலக்கிய வழக்குடையனவே;

ஃ இந்திமொழி இந்துஸ்தானி என்றும் வழங்கப் பெறுகிறது; பெரும்பாலும் பொதுமக்கள் பேசும் இந்தி, இந்துஸ்தானி ஆகும்; இது கொச்சை வடிவம். இஃதன்றி இலக்கண வழக்குடன் கூடியதே இந்தி எனப்பெறுகிறது;

ஃ இந்தியும் உருதும் இரண்டு மொழியாகக் கருதப் பெற்றாலும் இவை இரண்டிற்கும் இலக்கண அமைப்பும் அடிப்படைச் சொற்களும் ஒன்றாகவே உள்ளன; வரிவடிவத்தில்தான் இவை வேறுபடுகின்றன. உருது, பாரசிக-அரபு வரிவடிவத்தையும், இந்தி, நாகரி வரிவடிவத்தையும் பெற்றுள்ளன.

உருது மொழியில் அரபி, பாரசீகச் சொற்கள் மிகுதி: இந்தியில் பெரும்பாலும் தமிழ், வடதிராவிடச் சொற்களே உள்ளன.

ஃ மிகுதியான மக்களால் பேசப்பெறும் மொழி என்னும் தன்மையிலேயே தேவநாகரி எழுத்தில் இந்திமொழி ஆட்சி மொழியாக, இந்திய அமைப்பியல் சட்டம் 343-ஆவது பிரிவின் படி ஏற்றுக் கொள்ளப்பெற்றது. இவ்வாறு ஏற்றுக் கொள்ளப் பெற்ற நிகழ்ச்சியும் ஓர் ஏமாற்றே. பொதுமொழி (தேசிய மொழி)த் தேர்வில், பாராளுமன்ற உறுப்பினர்களிடையில் இந்திமொழி ஏற்பும் மறுப்பும் சம எண்ணிக்கையே பெற்றும், தலைவர் இந்திக்கு ஆதரவு தெரிவித்ததால், இந்தி இந்தியாவின் பொது மொழியாகவும் தேசிய மொழியாகவும் ஏற்கப்பட்டது.

ஃ 15 தேசிய மொழிகள் : அசாமி, காசுமீரி, இந்தி, வங்காளி, குசராத்தி, மராட்டி, ஒரிசா, பஞ்சாபி, உருது, சிந்தி, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், சமசுக்கிருதம் —இவற்றுள் சமசுக்கிருதம், காசுமீரி, சிந்தி எனும் மூன்று மொழிகள் தவிர, பிற 12 மொழிகளும் அவ்வம் மாநிலங்களின் ஆட்சி மொழிகள். (காசுமீரத்தின் ஆட்சி மொழி காசுமீரி அன்று ; உருதுவே.)

ஃ இந்தி பீகார், உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், இராசத்தான், இமாசலப்பிரதேசம், அருணசலப்பிரதேசம் ஆகிய 6 மாநிலங்களில் ஆட்சி மொழியாக உள்ளது.

ஃ இந்தியை அரசு தொலைக்காட்சியின் தேசிய நிகழ்ச்சிகளில் கையாளுவது பற்றி ஒரு விளக்கம் :

1) எடுத்துக்காட்டாக, 1982-ஆம் ஆண்டு ஆகத்து மாதம் முதல் 1983 மார்ச்சு 31 வரை(8 மாதங்களில்) வெளியான தேசிய நிகழ்ச்சிகள் ஒளிபரப்பான மொத்த மணி நேரங்கள் : | 365 மணி

2) இதில் தமிழ் நிகழ்ச்சி ஒளிபரப்பான நேரம் : | 3 மணி 17 நிமையம்.

ஆக தமிழ் நிகழ்ச்சி 100 இல் ஒரு பங்கு.

3)

ஆங்கிலம் ஒளிபரப்பு		—	54.8 %
இந்தி	,,	—	27.8 %
உருது	,,	—	1.5 %
வங்காளி	,,	—	1 %
தமிழ்	,,	—	0.9 %
பஞ்சாபி	,,	—	0.5 %
மலையாளம்	,,	—	0.2 %
தெலுங்கு	,,	—	0.1 %

(1983-இல் வெளியான புள்ளி விளத்தங்கள் ஓர் ஒப்பீட்டு அறிவுக்காக.)

○

அப்பாத்துரையார்
குடும்ப நலக் கொடை

பட்டியல் — 6.

ஆசிரியரின் அன்பு வேணடுகோளுக்கு இசைந்து பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் அவர்களின் குடும்பத்துக்கு உதவிய தூய தமிழ் நன்னெஞ்சங்கள்.

(4—3—91 முதல் 4—11—91 முடிய)

102 மதுரை. கா. செ. சாகுல் அமீது அவர்களும் அவர்வழி உரு. 5/- மேனி விடுத்த அன்பர்களும் : திருவாளர்கள். பா. தினகராசு, கே.எசு. நாராயணன், பா. மாணிக்கம், ச. கிருட்டிணமூர்த்தி, ம. ஸ்டீபன், மா. அருள்பிரகாசம், கா. கிருட்டிணமூர்த்தி, எசு. சங்கரராமன், சு. வசந்தா, பி. காளிமுத்து, செ. சின்னசாமி, சி. அலமேலு, கோ. இராசேந்திரன், பா. சாயிசந்திரசேகரன், மா. குமாரி, சு. தாமோதரன், பா. இரவிச்சந்திரன், செ. செயலக்குமி, ஏ. சுப்பிரமணி, கா. மலர்விழி, வீ. சுப்பையா, இரா. கணேசன், பா. செயப்பிரகாசு, பி. சின்னக்காளை, எசு. பழனி, மா. வீரன், எசு. அய்யப்பன், வீ. செயக்கொடி, பிச்சையம்மாள், டி. காளியப்பன், எசு. பழனிச்சாமி, ஆர். காமராசு, வி. சன்னுசி, பா. நித்தியானந்தன், ஆர். சோமசுந்தரம், இராமராசு, பிச்சை, அ. செல்வி, கனகமணி.

	40 × 5 : 00	200 - 00

103 பேரா. சாலை இளந்திரையனார், சென்னை-86. (மார்ச்சு 91 முதல் நவம்பர் 91 முடிய, மாதம் உரு. 100/- மேனி.)

	100 × 9	900 - 00
	மொத்தம்	1100 - 00
	முந்தைய மொத்தம்	14677 - 50
	தொகு மொத்தம்	15777 - 50

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

ஓ. ஓ! தமிழர்களே!

கடந்த 17—2—91-இல் ஈரோட்டில் நடந்த உ.த.மு.க. இரண்டாவது மாநாட்டில் ஆசிரியர் செய்த அரிய சிறப்புச் சொற்பொழிவு நூல் !

வெள்ளைத்தாள் பதிப்பு : 9-00 அச்சுத்தாள் பதிப்பு : 6-50

இஃது ஒரு புதிய வெளியீடு. அஞ்சல் செலவு : 2-00

தென்மொழி, சென்னை-5.

செய்திகள்

1. ஈழவிடுதலை அங்கீகரிப்பு மாநாடு —வேலூர்.

கடந்த 1—9—91 அன்று வ ஆ. வேலூரில் தமிழ்நாடு இளைஞர் பேரவை, தமிழ்நாடு மாணவர் பேரவை சார்பில் 'ஈழவிடுதலை ஏற்பு (அங்கீகரிப்பு) மாநாடு' நடைபெற இருந்தது.

மாநாட்டிற் கலந்து கொண்டு கருத்துரை ஆற்றுதற்கு முந்தின நாள் இரவே, பாவலரேறு பெருஞ்சித்திரனார் (உ.த.மு.க.), சியாவுதீன் அகமது (த.தே.இ.), தமிழ்முகிலன், பொழிலன், பவணந்தி, நற்றேவன் ஆகியோரையும், மறுநாள் காலை, வழக்கறிஞர் தி. இராமதாசு (த.இ.வி.க.), புலவர் அரசமாணிக்கனார் (உ.த.மு.க.), பா. கல்யாணி (ம.க.இ.), தியாகு (திலீபன் மன்றம்) முதலியோர் உள்ளடங்கிய 73 பேர்களையும் தளைப்படுத்தி மாநாட்டையும் அரசு தடைப்படுத்தியது. தளைப்படுத்தப் பெற்றவர்கள் 1—9—91 இரவு பலவகையான கட்டுப்பாட்டுடன் விடுவிக்கப் பெற்றனர்.

2. தமிழர் பாதுகாப்பு மாநாடு —சென்னை.

சென்ற 8—9—91 ஞாயிறு காலை 9 மணியளவில் சென்னை, தேவநேயப் பாவாணர் மாவட்ட நடுவண் நூலகத்தில், தலைநகர் தமிழ்ச் சங்கம் சார்பில் தமிழர் பாதுகாப்பு மாநாடு நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திருவாட்டி முனைவர். சாலினி இளந்திரையன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். புலவர் த. சுந்தரராசன் வரவேற்புரையாற்றினார். அதன்பின், தற்போதுள்ள சூழலில், தமிழர்கள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர். எனவே அவர்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்தி, திருவாளர்கள் பாவலரேறு பெருஞ்சித்திரனார், முனைவர். சாலை இளந்திரையனார், உவமைப் பாவலர் சுரதா, செல்வி அ. அருள்மொழி, புலவர் வெற்றியழகன், இர. வையத்தரசு, நெல்லை இராமச்சந்திரன், அரு. கோபாலன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். இறுதியில் புலவர் பி. சி. கணேசன் அவர்கள் நன்றியுரைக்குப் பின் நிகழ்ச்சி பகல் 2 மணியளவில் நிறைவுற்றது.

இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றியதற்காகத்தான் பாவலரேறு அவர்கள் 24—9—91 அன்று சிறைப் பிடிக்கப் பெற்றுப் பதினைந்து நாள்கள் சென்னை நடுவண் சிறையிலிருந்தார்கள். அதன் பின்னர் அவர் மேல் வழக்கு போடப் பெற்று 7-10-91 அன்று பொறுப்பில் விடுவிக்கப் பெற்றார்கள்.

3. தூயதமிழ் வளர்ச்சி மேம்பாட்டுப் பேரவை —சென்னை:

கடந்த 7—12—91 -இல், சென்னை பெரியார் திடலில் தமிழ்

வள்ளல் கங்காதரனார், தூய தமிழ் வளர்ச்சிக்காகத் தம்முடைய வாணாள் எச்சமாகிய உருபா ஐந்து இலக்கத்தை ஓர் அறக் கட்டளையாக உருவாக்கி வைத்தார்.

அவ் வறக்கட்டளையின் செயற்பாடுகளை வரையறுப்பதற்கான முதல் கூட்டம், முன்னாள் உயரற மன்ற நடுவர் ப. வேணுகோபால் தலைமையில் கூடியது. அக் கூட்டத்தில் பாவலரேறு பெருஞ்சித்திரனார், பேரா. முனைவர் சாலை இளந்திரையனார், பேரா. முனைவர். பொற்கோ, பேரா. மதிவாணன், பேரா. இறையன் பேரா. புலவர் நா. இராமநாதன், பேரா. சாலினி இளந்திரையன், தமிழ் வள்ளல் கங்காதரனார் முதலியோர் கலந்து கொண்டனர். அவர்கள் கலந்தாய்வு செய்து தூய தமிழை நடைமுறைப் படுத்துவதற்கும், 'தூயதமிழ் வளர்ச்சி மேம்பாட்டுப் பேரவை' என்னும் ஓர் அமைப்பை உருவாக்கியுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில், பாவலரேறு அவர்கள் தம் கருத்துகளை வெளிப்படுத்துகையில், பிரான்சில் தூய பிரஞ்சு மொழி வளர்ச்சிக்காகப் பல்துறைப் பிரஞ்சு நாட்டு அறிஞர் குழு அமைக்கப்பட்டு, அது பிரஞ்சு அரசாலும் ஏற்கப்பட்டுள்ளதையும், அதன் மூலம் தூய பிரஞ்சு மொழி அங்கும் எங்கும் எதிலும் நடைமுறைப் படுத்தப்பட்டு உள்ளதையும் தெரிவித்தார்.

அதேபோல், இங்கும் தூய தமிழ் ஆக்கத்திற்கும், மக்களிடம் அவ்வுணர்வு பரவுதற்கும் இக்குழு பல வகையிலும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும், இதற்காகத் தேவைப்படும் கருவி நூல்களை உருவாக்க வேண்டும் என்றும், அதற்காக இதுவரை வெளிவந்துள்ள தூயதமிழ் நூல்களையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் கூறினார்.

இக் கூட்டத்தில் பார்வையாளராக 'மக்கள் நேசன்' இணை ஆசிரியரும், சேரர் கொற்றம் என்ற அமைப்பை உருவாக்கிக் கோவை நகரக் கடைத் தெருக்கள் எங்கும் தூய தமிழை நடைமுறைப் படுத்தியவருமாகிய புலவர் இளமாறன் அவர்களும் கலந்து கொண்டார்.

4. தமிழர் மறுமலர்ச்சிப் பொதுக்கூட்டம்: மெய்ஞ்ஞானபுரம்:

சென்ற 26-12-91 அன்று வ.உ.சி. மாவட்டம் மெய்ஞ்ஞானபுரத்தில், மாலை 7-30 மணியளவில், தமிழர் மறுமலர்ச்சிக் கழகச் சார்பில், பொதுக் கூட்டம் திரு. சோதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில், தமிழர்களுக்கு இன்று ஏற்பட்டு வரும் தாக்கங்களை விளக்கி, புலவர் தமிழ்மாறன் அவர்களும், உலகத் தமிழின முன்னேற்றக் கழகத் துணைப் பொதுச் செயலர், இனவியல் அறிஞர் பறம்பை அறிவன் அவர்களும் உரையாற்றினர். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் நீண்ட விளக்கவுரையாற்றினார். நிகழ்ச்சி இரவு 10-30 மணியளவில் முடிவுற்றது.

5. தமிழர் மறுமலர்ச்சிக் கழகக் கூட்டம் —திருச்செந்தூர்.

கடந்த 27—12—91 அன்று வ.உ.சி. மாவட்டம், திருச்செந்தூர், பெரியார் திடலில் மாலை 7-30 மணியளவில் தமிழர் மறுமலர்ச்சிக் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு இளவேனில் ஒளிப்பேழையக உரிமையாளரும், தமிழர் மறுமலர்ச்சிக் கழக அமைப்பாளருமான ச. முருகேசன் அவர்கள் தலைமை தாங்கினார். தலைமையுரைக்குப் பின் இனவியல் அறிஞர் பறம்பை அறிவன் (துணைப் பொதுச் செயலர் உ. த. மு. க.), மலர்வேந்தன், பசும்பொன், (தலைவர் கீழத் தென்கலம் உ. த. மு.க.), அதியமான் (நெல்லை கட்டபொம்மன் மாவட்ட உ.த.மு.க. அமைப்பாளர்), புலவர் தமிழ்மாறன், ஆகியோர் உரை நிகழ்த்தினர். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் (உ. த. மு.க. முதல்வர்) விரிவும் விளக்கமுமாக இரவு 11 மணி வரை உரையாற்றினார்.

6 பேராயர் அசரியா பழைய மாணவர் சங்க ஆண்டு விழா —வெள்ளாளன்விளை.

சென்ற 28—12—91 காரிக்கிழமை, வ. உ. சி. மாவட்டம், வெள்ளாளன்விளை, பேராயர் அசரியா மேல் நிலைப் பள்ளியில் பழைய மாணவர் சங்க ஆண்டு விழா நிகழ்ச்சி இனிதே நடைபெற்றது. காலை, மாலையில் நிகழ்ச்சிகளும், பகலில் விருந்தும் நிகழ்ந்தன. பிற்பகல் $3\frac{1}{2}$ மணியளவில், பள்ளித் தலைமையாசிரியர் எசு. செ. வின்செண்ட் அவர்கள் தலைமையில், அறிஞர் பறம்பை அறிவன், பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். இறுதியில் பழைய மாணவர் கே. செயமணி (திரைச்சித்ரா ஆசிரியர், சென்னை.) நன்றியுரைக்குப் பின் பிற்பகல் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

7. தமிழர் மறுமலர்ச்சிக் கழகக் கூட்டம் —பரமன்குறிச்சி.

சென்ற 28—12—91 இரவு 8 மணியளவில், வ.உ.சி. (நெல்லை) மா. வ. பரமன்குறிச்சி, கடைத் தெருத் திடலில், தமிழர் மறுமலர்ச்சிக் கழகத் தொடக்க விழாக் கூட்டம் திரு. அ. எட்வர்டு தலைமையில் நடைபெற்றது. தொடக்கத்தில் உ. த. மு. க. துணைப் பொதுச் செயலர். இனவியலறிஞர் பறம்பை அறிவன் அவர்கள் கருத்துரைக்குப் பின், மலர்வேந்தன், புலவர் தமிழ்மாறன் ஆகியோர் உணர்வுரைகள் ஆற்றினார்கள். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தமிழ் மொழி, இனம், நாடு பற்றிய விரிவான ஆய்வுரை நிகழ்த்தினார்கள். இரவு $11\frac{1}{2}$ மணியளவில் நிகழ்ச்சி நிறைவுற்றது.

8. தமிழர் மறுமலர்ச்சிக் கழகக் கூட்டம் —சாத்தான்குளம்.

சென்ற 29—12—91 வ.உ.சி. மாவட்டம், சாத்தான்குளம், காமராசர் நினைவு மண்டபம் முன்பு, மாலை 7-30 மணியளவில், தமிழர் மறுமலர்ச்சிக் கழகத்தின் தொடக்க விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு புலவர் வே. சத்தியராசன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். தலைமையுரைக்குப் பின் உ.த.மு.க. துணைப் பொதுச் செயலர் இனவியலறிஞர் பறம்பை அறிவன் அவர்கள் கருத்துரையாற்றினார்கள். அடுத்து உ.த.மு.க. முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் சிறந்த கருத்துரை ஆற்றினார்கள். இறுதியில் புலவர் தமிழ்மாறன் நிறைவுரை நிகழ்த்தினார்.

9. கன்னட வெறியர்களைக் கண்டித்துக் கண்டன ஊர்வலம்.

கடந்த 6—1—92 காரி மாலை 5 மணியளவில், புதுச்சேரி, பிள்ளைத்தோட்டம், தந்தை பெரியார் சிலை பின்புறமிருந்து, புதுவை, தமிழினத் தொண்டியக்கம் சார்பில் கருநாடகத் தமிழர்கள் மேல் தாக்குதல் நடத்திக் காவிரி நீர்ச் சிக்கலுக்கான தீர்வில், உச்சநெறி மன்றக் கருத்துரையையும் காதில் வாங்கிக் கொள்ளாமல், முட்டுக்கட்டையிடுகின்ற கருநாடகக் கன்னட வெறியர்களையும் அவர்களைத் தூண்டிவிடும் முதலமைச்சர் பங்காரப்பாவையும், கன்னட நடிகர் இராசகுமாரையும், கன்னட இன வெறியர் வட்டாள் நாகராசையும் கண்டித்துக் கண்டன ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

ஊர்வலத்தில் ஆடவர்களும் பெண்டிர்களுமாக ஏறத்தாழ 500 பேர்கள் கலந்து கொண்டனர். ஊர்வலத்தைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார், இனநலப் பெரியவர் மூர்த்தி ஐயா, சொல்லாய்வறிஞர் ப. அருளி ஆகியோர் முன்னிலை தாங்கி வீறுபெற நடந்து சென்று, வீதிகளில் நின்று பார்ப்போர்க்கும் வீறுணர்வு ஊட்டி முழக்கமிட்டுச் சென்றனர். ஊர்வலம் புதுவையிலுள்ள சில முகாமையான சாலைகள் வழியாகச் சென்று இரவு 8½ மணி அளவில் அறிஞர் அண்ணா சிலை வரை சென்று, முழக்கங்கள் முழங்கி நிறைவுற்றது.

ஊர்வலத்தில், சென்ற முதியவர்களும், பெண்டிர்களும், இளைஞர்களும், சிறுவர்களும், தொண்டர்களும் கீழ்வரும் முழக்கங்களை இட்டுச் சென்றதும் தஞ்சையிலிருந்து வந்த தமிழ்மறக் குழுவினர் தாரை, தப்பட்டை, கொம்பு, பறை முழக்கிக் கொண்டு போனதும், புதுவை நகரத்தையும், தெருக்களையும் கிடுநடுங்கச் செய்தது குறிப்பிடத் தக்கது. ஊர்வல முழக்கங்களில் சில :

'ஒன்றிணைவோம் ஒன்றிணைவோம், தமிழர்களே ஒன்றிணைவோம்.!' 'விழித்தெழு! விழித்தெழு! தமிழினமே விழித்தெழு!' 'ஒருமைப்பாடு பேசாதே! உதை, அடி பட்டுச் சாகாதே!' 'காவிரி நீர்விடக் கசக்கிறதா? நெய்வேலி மின்சாரம் இனிக்கிறதா?' 'இந்தியத் தேசியம் பேசாதே! இனியும் 'மோசம்' போகாதே!' 'நடுவண் அரசே! நடுவண் அரசே! நடுவில் நின்று குழப்பாதே!' நாடகமாடி ஏய்க்காதே! புதுவை, தமிழக அரசுகளே! பொறுப்புடன் உடனே செயல்படுக! ○

○ : 1489 : இருபதாம் நூற்றுண்டின் இணையற்ற பாவலர் வேந்தே! வணக்கம்; வாழி!

தென்மொழி 26—4-இல் தங்கள் இளவலும் நற்றமிழ்த் தொண்டருமான திரு. மா. அரசு அவர்களின் இயற்கையெய்திய செய்தி அறிந்து துணுக்குற்றேன். அவர் மறைவு அவர் குடும்பத்துக்கு மட்டுமன்று; நம் இயக்கத்துக்கும் ஈடிலா இழப்பாகிறது. அவர் புலன்மா இறையருளில் திளைக்க இறையருளையே வேண்டுகிறேன். இவண், அன்பின் —வை. வீருண்டான், அரிமழம்.

○ : 1490 : ஐயா. இந்த மாதத் "தென்மொழி" இதழில் அகமுடை நம்பி எழுதிய உரையைப் படித்தேன். அதில் பல முரணுன கருத்துகள் உள்ளன. தாங்கள் அரசியலில் உள்ள தலைவர்களை குறை சொல்வது அவருக்குப் பிடிக்கவில்லையென்று கூறுகிருர். மேலும் அண்ணு அரசியலில் ஈடுபடாதிருந்தால் தமிழகம் ஒரு சேக்சுபியரைக் கண்டிருக்கும் என்கிருர். அவருக்கு என் கருத்தை எடுத்துரைக்க விரும்புகிறேன்.

நாம் 'தமிழ்' 'தமிழ்' என்று மொழியை மட்டுமே பிடித்துக் கொண்டிருந்தால் போதாது. அரசியலும் நமக்குத் தேவை. அகமுடைநம்பி என்ன பார்ப்பனீயத்திற்கு வால் பிடிக்கிருரா? அரசியலில் பார்ப்பனீயம் மேலோங்கி நிற்க வேண்டும் என்கிருரா? அரசியல் சாய்க்கடையாகக் காட்சி தருவதற்குக் கரணியம் பார்ப்பனீயமே என்பது அவருக்குத் தெரியாதா? திராவிடத் தலைவர்களை நாம் ஏன் எதிர்க்கிருேம்? அவர்கள் கையில் அதிகாரம் இருந்தபோது, மொழி நலம் இல்லாது இருந்ததால் தானே? நாம் தமிழ் மீது பற்று வைப்பதைவிடத் தமிழ் இனத்தின் மீது பற்றுவைப்பதே சிறந்தது. அகமுடைநம்பி கூறும் கருத்து என்ன?

'மொழிப் பற்றோடு நிறுத்திக் கொள்,
இனப்பற்று வேண்டாம்!' —இதைத் தானே கூறுகிருர்?

இக்கட்டுரையை அவர் தெரியாமல் எழுதினுல் மன்னிப்போம். தெரிந்துதான் எழுதினுர் என்ருல் தமிழ் இனத்தின் முதல் இரண்டகர் அவர்தாம். அண்ணு அரசியலில் ஈடுபடாதிருந்தால் இன்று நாட்டைப் பார்ப்பனீயமும், 'இந்தி'யருமே ஆண்டிருப்பர். நமக்கு சேக்சுபியரே தேவையில்லை. நாம் நாமாக இருந்தால் போதாதா? அகமுடைநம்பி, அண்ணுவை சேக்சுபியராய் ஏன் பார்க்க வேண்டும்? சேக்சுபியரை அண்ணுவாகப் பார்த்தால் என்ன?

கடைசியில் அவருக்கு என் பணிவான வேண்டுகோள்: அகமுடைநம்பி அவர்களே! தாங்கள் தங்களுடை இலக்கியப் பணியைத் "தனித்தமிழ் நாடு" என்ற கொள்கையோடு இணைத்து ஆற்றுங்கள்; இலக்கிய வாணிகத்தைக் கைவிடுங்கள். இலக்கக் கணக்கில் படித்துச் சுவைப்பவர்களைவிட' சில நூற்றுக் கணக்கில் படித்து உணர்வைப் பெறுபவர்களே தென்மொழிக்குத் தேவை.

அன்பன்—ச. அழகுஒளி, சென்னை-48.

○ : 1491 : உலாவரும் தமிழ்த்தாயின் தமிழ் மகனே, பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்களே! வணக்கமும் வாழ்த்துகளும். திருவள்ளுவர் அருளால் நீண்ட வாணுளுடன் வாழ இறைஞ்சுகின்றேன், ஐயா!

தங்களிடம் நீண்ட நெடுநாளாக, என் மனத்திலுள்ள ஆசையை வெளிப்படுத்துகின்றேன். திருக்குறளையும்—திருவள்ளுவரையும் ஊறுகாயாகப் பயன்படுத்துவதை விட்டுத் திருக்குறளைத் தமிழர்களின் மறையாகவும் "(எல்லா நல்லது கெட்டதுகளுக்கும் பயன்படுத்தும் வகையில்)" திருவள்ளுவரைத் தமிழர்களின் வழி

காட்டியாகவோ அல்லது தெய்வமாகவோ கருத, தங்களைப் போன்றோர், முன் நின்று உரைக்க வேண்டுமாய் அன்போடு வேண்டுகிறேன்; உங்களது பிடி'வாத'த்தை ஆய்வு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். திருக்குறள்—திருவள்ளுவரால்—மட்டுமே தமிழர்களிடையே ஒற்றுமை—ஒருமைப் பாட்டை உருவாக்க முடியும்; சாதிச் சழக்குகளைக் குறளோதி அகற்ற முடியும்; பிணக்குகளை ஒழிக்க முடியும்.

2000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே திருக்குறளை மனதார ஏற்றிருந்தால் இன்று நாம் கல்வியிலும், பொருளியலிலும் வானளவுக்கு உயர்ந்திருக்க மாட்டோமா?! எண்ணிப் பாருங்கள்! திருக்குறளையும், திருவள்ளுவரையும் நாம் உலகுக்குக் காட்ட வேண்டுமானால்—அது தமிழர்களால் முழு மனத்தோடு ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும். அதற்கு முறையான நெறி வடிவங்களை உருவாக்கி மக்கள் நடுவில் பரப்ப வேண்டும். செய்வீர்களா ஐயா! அல்லது அதை விடுத்து, 'எனக்கெல்லாம் தெரியும்—நீங்களார் அரைவேக்காடுகள்?' என 'அன்பு' கூர்ந்து அடம் பிடிக்கவேண்டாம்; இக்கருத்தினைத் தங்களைப் போன்றோர் விரிவாகச் சொல்ல முன்வராவிட்டால், உலகெலாம் பரந்து வாழும் தமிழினம் மெல்ல மெல்ல 'இந்து'வாகி இந்தியனாகிவிடும். திருவள்ளுவன் மீது ஆணையிட்டுச் சொல்கின்றேன், இஃது உண்மை! உண்மை! உண்மை!

எங்கள் நாட்டிலேயே இந்தக் கூத்து—தமிழன் தேய்ந்து இந்தியனாகி வருகிறான்! இந்தோனேசியாவில் பீசியில், மொரிசியசில், சிங்கப்பூரில், இன்னும் பல நாடுகளில் இது—இந்தியன் நாடகம்—நாள்தோறும் அரங்கேறுகிறது. உங்களுக்குத் தெரியுமா!? அந்தமான்—நிக்கோபார் தீவுக் கூட்டங்களில் வாழும் தமிழர்கள்—தமிழைப் பேசுவதைத் தவிர்த்து இந்தியிலே பேசி உண்மையான இந்தியனாக மாறி வருகிறார்கள்; நொந்த உள்ளத்தோடு வெந்து போய்ச் சொல்லுகின்றேன்; தமிழன்—தமிழனாக வாழவில்லை—இந்தியனாகவே வாழ்கிறான்—வாழ விரும்புகிறான்.

ஏன்? தமிழனுக்கு மதமில்லை; வழிபாட்டிற்குத் தகுந்த வழி காட்டியில்லை. கேட்டால் தமிழ்க் கடவுள் முருகனென்பார்கள்— மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறி விளையாடும்;

உங்களுக்கு உண்மையில் தமிழ், தமிழர், தமிழ் நிலம் மீது பற்று, பாசம், பரிவு இருக்குமானால்—திருக்குறள்—திருவள்ளுவரை உறுதிப்படுத்த, நிலைநாட்ட முன் வாருங்கள்.

இல்லையேல் நீங்களும் கலைஞரைப்போல் ',உலகினத் தமிழ்த் தலைவர்' எனும்'கபடதாரி'யே. இதில் மாற்றமில்லை,மறுப்புமில்லை.

வாழும் போது திருக்குறளைப் படித்து வாழ்!
சாகும் போது திருவள்ளுவனை நினைத்துச் சா!

—நா. செல். அமைச்சியப்பன், கேமரன்மலை; மலேசியா

ெ: 1492: அன்புமிக்க ஐயா; வணக்கம்...... உறுப்பினர்களைச் சேர்த்துத் தொகையை அனுப்பி வைக்கிறேன். கூடுமானவரையில் இதழ்கள் காலா காலத்தில் கிடைத்தால், மேலும் உறுப்பினர்களைச் சேர்க்க ஏதுவாகும். மேலும் தென்மொழி வருமட்டும் ஓர் ஏக்கம் உண்டாகிறது; அதற்காகத்தான் இப்படி எழுதுகிறேன். வெளியிடும் துன்ப நிலையையும் அறிவேன்; ஏக்கத்தைப் போக்கத் தென்மொழி தேவைப்படுகிறதே. வணக்கம்; தங்கள் அன்புள்ள,

—அதிமான், தாழ்யுற்று;

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005; (தமிழகம்)